நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

පුදිය පූමි

சுற்று 08 ஜனவரி/பெப்ரவரி 2001 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 38


## மனித முகம் எங்கே !

- தொலரின் விலை நூறு ரூபாவிற்கு மேல்
- அரிசி 35 ரூபா. சீனி 45 ரூபா
- அத்தியாவசியப் பொருட்கள் அதிக விலை
- எரிபொருட்கள் யாவும் விலை ஏற்றம்
- போக்குவரத்து மின்சாரம் தொலைபேசி கட்டண உயர்வு

இன்னும் இன்னும் விலைகள் ஏறும் !

*இவை தான் சந்திரிகா அம்மையாரின் மனித முகம்கொண்ட பொருளாதாரம்*

# இந்திய மேலாதிக்கத்தின் கரங்கள் நோர்வே முயற்சியை தடுக்கின்றன !


நோர்வே அரசின் மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளர் முயற்சியால் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தையில் ஈடுபடக்கூடிய சாத்தியங்களை சந்தேகத்துடன் நோக்க வேண்டிய சூழ்நிலையே நிலவுகிறது. நோர்வேயின் முயற்சிகளை குழப்பும் விதத்திலேயே இந்திய அரசு நடந்து கொள்கிறது. அரசாங்கத்திற்குள்ளும் வெளியிலும் இருக்கும் சிங்கள தீவிரவாத சக்திகளும், பாசிக சிங்கள பௌத்த சக்திகளும் சிங்கள மக்களிடையே எதிர்ப்புணர்வுகளை தூண்டும் வகையில் நடந்து கொள்கின்றன. தமிழ் அமைப்புகள் நோர்வேயின் முயற்சிகள் திருப்தியளிப்பதாக இல்லை என்று கூறுவதன் மூலம் சிங்கள தீவிரசக்திகளுக்கும், பாசிச சிங்கள பௌத்த சக்திகளுக்கும் உதவுகின்ற நிலைப்பாட்டையே எடுத்துள்ளன.

## தீவிர சிங்கள - தமிழ் அமைப்புகள் ஒரே குரலில் பேசும் விந்தை !

எப்படியாவது யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்பட வேண்டும் எனத் தமிழ் முஸ்லீம் மக்களும் யுத்தத்தால் நாளாந்தம் பாதிக்கப் படுகின்ற சிங்கள மக்களும் விரும்புகின்றனர். சிங்கள மக்கள் மத்தியில் இயங்குகின்ற இடதுசாரி அமைப்புகளில் சில நோர்வேயின் முயற்சிகளை நிபந்தனையுடன் ஆதரிப்பதாக கூறியுள்ளன. புதிய ஜனநாயக கட்சியும் அவ்வாறான நிலைபாட்டையே கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் நோர்வேயின் மூன்றாம் தரப்பு முயற்சிகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. அரசாங்கமும் இணங்கியுள்ளது. தமிழ் கட்சிகளோ தமிழ்மக்களுக்கு நியாயமானதீர்வு கிடைக்கவேண்டும் என்று கூறிக் கொண்டு அதற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள இந்திய ஆளும் வாக்கத்திற்கு நோகாமல் நடப்பதிலேயே கவனம் செலுத்து கின்றன. நோர்வேயின் முயற்சிகளை இந்திய ஆளும் வர்க்ககம் அங்கீகரிக்கவில்லை என்பதால் தமிழ் கட்சிகள் நோர்வேயின் முயற்சிகள் பற்றி அடக்கியே வாசிக்கின்றன. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி உச்சரித்தாலும் இந்திய ஆளும் வர்க்க நலனுக்கு அனுகூலமாக நடப்பதையே தமிழ்க் கட்சிகள் அவற்றின் நிலைப்பாடாக கொண்டுள்ளன. இது அவர்களின் வரலாறு.

இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலை என்பது இந்திய மக்களுக்கு எதிரானதல்ல. இந்திய மக்களையும் அங்கு வாழும் தேசிய இனங்களை அடக்கியொடுக்கி கொண்டிருக்கின்ற இந்திய ஆளும் வர்க்கம் இலங்கை தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்க லாயக்கற்றது. நோர்வே முயற்சிகள் தொடங்கப்பட்ட காலம் முதல் விடுதலை புலிகள் இயக்கத்தை பேச்சுவார்த்தைக்கு வரமுடியாதவாறு தடுக்கின்ற நடவடிக்கைகளையே இந்திய அரசு எடுத்து வருகிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கிற்கு தேவையானவராக விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனை பிரகடனப் படுத்தி அவரை நாடுகடத்த வேண்டும் என்று கோரியதில் இருந்து யுத்தக் கப்பல் ஒன்றை இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்தது உள்ளாக பல விடயங்களை இந்தியா அரசு செய்துவருகிறது. அத்துடன் விரபாகரனைப் பிடிப்பதற்கு சர்வதேசப் பொலீஸ் அமைப்பான இன்றர்போல் மூலம் இந்தியா நடவடிக்கை எடுத்தும் வருகின்றது. அதனை வெளிப்படையாக கண்டிக்க முடியாதவாறே தமிழ் மக்களின் அபிலாஷைகள் பற்றித் தமிழ் கட்சிகள் உச்சரிக்கின்றன. அவைகள் இந்தியப் பிரதமரை சந்திப்பதிலேயே அக்கறை கொண்டிருக்கின்றன. இவ்விதமாக நோர்வே முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் இந்தியா மீது விசுவாசம் கொண்டவர்களாக இருப்பதன் மூலம் தமிழ்த் தலைவர்கள் நோர்வே முயற்சிகளுக்கு உள்ளூர எதிரானவர்களாகவே இருக்கின்றனர். இந்த நிலைப்பாடு நோர்வே முயற்சிகளை எதிர்க்கும் சிங்கள தீவிரவாத சக்திகளினதும், பாசிச சிங்கள தீவிரவாத சக்திகளினதும் நிலைப்பாட்டுக்கு ஒத்துப் போகக் கூடியதே ஆகும். இரு தரப்பினரும் நோர்வேயின் முயற்சியை நிராகரிப்பதன் மூலம் தமது இந்திய விசுவாசத்தைத் தெரிவிக் கின்றனர். அரசாங்கத்திற்குள் பிரதமரும்



10ம் பக்கம் பார்க்க

# பிரித்தானியா புலிகளைத் தடைசெய்தால் பேரினவாத ஒடுக்குமுறை வேகமடையும்

புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் எனக் கூறி அதனை பிரித்தானிய அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் என இலங்கை அரசாங்கம் வற்புறுத்தி வருகின்றது. இவ் விடயத்தில் வெளி உறவு அமைச்சர் கதிர்காமர் மிகவும் கடுமையான தொனியில் பிரித்தானிய அரசாங்கத்தை நெருக்கி வருகிறார். அதே வேளை சிஹல உறுமய, வீரவிதான பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி போன்ற பேரினவாத அமைப்புக்கள் பிரித்தானிய எதிர்ப்ப நடவடிக்கையையும் செய்து வருகின்றன.

இங்கே எழும் முக்கிய கேள்வி என்ன வெனில் பிரித்தானியா புலிகள் இயக்கத்தை தடை செய்து விட்டால் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்ந்து விடுமா ? அல்லது புலிகள் இயக்கம் அத்துடன் அழிந்தொழிந்து கொள்ளுமா ? ஏற்கனவே இந்தியா, அமெரிக்கா, இலங்கை, மலேசியா ஆகியன புலிகள் இயக்கத்தை தடை செய்து கொண்டன. அதனால் என்ன நடந்து முடிந்தன.

புலிகள் இயக்கத்தை பிரித்தானியா தடை செய்து கொண்டால் இலங்கை அரசாங்கத்தின் ஒரு சர்வதேசப் பிரசாரத்திற்கு ஒரு பிடி கிடைக்க மட்டுமே முடியும். அத்தகைய பிரசாரத் துணையுடன் தனது பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையை மேலும் தமிழ் மக்களுக்கு எதிரான வழியில் வேகப் படுத்திக் கொள்ள இயலும். அதன் மூலம் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு என்பது புலிகளை முற்றாக அழித்தொழிப்பது தான் என்னும் பேரினவாத நிலைப்பாட்டை நிலை நிறுத்திக் கொள்ள முடியும் என்பதே அரசின் உள் நோக்கமாகும்.

இன்று யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை என்பது ஒரு புறமாகவும் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையை நடைமுறைப்படுத்துவது மறு புறமாகவும் உள்ள அரசியல் யதார்த்தம் தெளிவாக உள்ளது. இதில் எவராயினும் ஒருவரால் ஒரு புறத்தில் மட்டுமே நிற்க முடியும். முன்னையது முழு மக்களுக்கும் சார்பானது. பின்னையது ஒடுக்குவோருக்கு உரியது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை சுயநிர்ணய உரிமை என்பவற்றை முன்னெடுக்க முன்வந்திருப்பதால் அவர்களது நிலைப்பாடு மக்கள் சார்பானதேயாகும். அரசாங்கம் இதில் பின்வாங்கி நிற்பதால் அது மக்கள் விரோதமானதேயாகும்.

ஆதலால் புலிகள் இயக்கத்தை தடை செய்வதன் மூலமாக ஒடுக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அபிலாஷைகளை மறுத்து இல்லாதொழித்து விட முடியாது. அவ்வாறே தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவம் செய்து நிற்கும் போராட்ட இயக்கத்தை அழித்து விடவும் முடியாது.

10ம் பக்கம் பார்க்க

# மலையக மக்களை திசை திருப்பும் அமைச்சர் ஆறுமுகத்தின் வாக்குறுதிகள்

மலையகத்தில் அன்மையில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களை மூடிவிடப்போவதாக அமைச்சர் ஆறுமுகத்திடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன. பிந்துனுவெவ முகாம் கொலைகளை அடுத்து மலையகத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டங்களை தொடரவிடாது தடுத்து நிறுத்தும் வகையில் தலவாக்கெலை டிக்கோயா ஆகிய நகரங்களுக்கண்மையில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் இராணுவ சோதனைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் உள்ளாகி வருகின்றனர். அம்முகாம்களை மூடிவிடும்படி மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதியை தான் சந்தித்தபோது அம்முகாம்களை மூடிவிடப்போவதாக தனக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டதாக அமைச்சர் ஆறுமுகம் தெரிவித் திருந்தார். ஆனால் அம்முகாம்களை மூடிவிட எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதது மட்டுமன்றி டயகம பகுதியில் நிரந்தரமாகவே பாரிய இராணுவ முகாமொன்றை அமைப்ப தற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாக அறிய முடிகிறது.

இராணுவ முகாம்களை மூடிவிடவேண்டும் என்று அமைச்சர் ஆறுமுகம் ஜனாதிபதியிடம் உண்மையாகவே கோரிக்கை விடுத்தாரா அல்லது வெறும்பத்திரிகை செய்திதானா என்பது பற்றி தெரிந்து கொள்ள முடியவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்தம் 400 ரூபா சம்பள உயர்வு வழங்கப் படும் என்று கொடுக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதி இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. மலையகத்தில் அன்மையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படும் என்று கூறுவதும் 400 சம்பள உயர்வு

*10ம் பக்கம் பார்க்க*

# பத்திரிகையாளர் கைதும் சித்திரவதையும்

யாழ். குடாநாட்டின் பத்திரிகை யாளர் எஸ். திருச்செல்வம் கொழும்பில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாகி இருக்கிறார். இவரது கைதுக்கும் தடுத்து வைத்திருப் பதற்குமான காரணம் தான் வேடிக்கையானது. 1992ம் ஆண்டில் புலிகள் இயக்கத்திற்குப் பணம் கொடுத்தார் என்பதே குற்றச் சாட்டாகும். இதுதான் காரணம் என்றால் தற்போது அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள யாழ் குடாநாட்டில் வாழும் அனைத்து மக்களும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட வேண்டியே ஏற்படும்.

வெறும் தகவல் அடிப்படையில் இப் பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டு சித்திரவதை களுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை தேசிய மனித

*10ம் பக்கம் பார்க்க*

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தலைமைகளும் அடிமைத்தன அரசியலும்

மலையக மக்கள் இன-வர்க்க அடிப்படைகளில் ஒடுக்கப்பட்டு வரும் சூழல் என்றுமில்லாதவாறு வெளிப்பாடடைந்து காணப் படுகின்றது. அதேவேளை அவர்களைத் தேசிய வாழ்வில் இருந்து தனிமைப்படுத்தி வந்த திலும் இனவாத பேரின வாத ஆளும் வர்க்க சக்திகள் மிகக் கவனமாக இருந்தும் வந்துள்ளன. மலையகப் பாட்டாளி வர்க்கத்திடம் கடுமையான வேலை வாங்குவதிலும் மிகக் குறைந்த நாட் சம்பளம் வழங்குவதிலும் ஏனைய உரிமைகள் சலுகைகள் வழங்குவதிலும் பாரிய அளவிலான பாரபட்சம் காட்டப்பட்டு வந்துள்ளது. அவ்வாறே இனத்துவ அடையாளங்களை தனித்துவங்களைத் தொடரவிடாது மறுத்துக் கொள்வதிலும் அதிக அக்கறையுடன் ஆளும் வர்க்க சக்திகள் செயல்பட்டும் வந்துள்ளன.

இருந்த போதிலும் மலையக மக்கள் மோசமான சுரண்டலின் மத்தியிலும் தமது இனத்துவ அடையாளங்களைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளதுடன் ஒரு தேசிய இனமாகவும் முழுமை அடைந்துள்ளனர். ஆனால் அவர்களுக்குரிய இனத்துவ உரிமைகள் எதுமே உறுதி செய்யப்படவில்லை. பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளை அவர்கள் எதிர் நோக்கி நிற்கின்றனர். தமது மொழி கலாச்சார உரிமைகளுக்காகப் போராடவும், நிலம், வாழவிடம், கல்வி, சுகாதாரம் போன்றவற்றைப் பெற்றிடவும் அவர்கள் முன் நிற்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இவற்றை நோக்கும் போது மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வரையறைக்குள் நாட்டின் தேசிய இனப் பிரச்சினையின் ஒரு பகுதியாக உள்ளனர். எனவே தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்காகப் பேசப்படும் எத்தகைய பேச்சு வார்த்தையிலும் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினை பற்றிய தீர்வும் அவசியமானதாகும். மலையக மக்களை ஒரு தேசிய இனமாகக் கொண்டு சுயாட்சி உள்ள அமைப்பு என்னும் வடிவத்தில் அவர்களுக்குரிய தீர்வு அரசியல் யாப்பின் ஊடாக நிலை நிறுத்தப்படல் வேண்டும்.

ஆனால் மலையகத்தின் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் மேற் குறித்த விடயங்கள் பற்றி எவ்வித அக்கறையும் கொள்வதாக இல்லை. த்னித் தனிப் பிரச்சினைகள் பற்றி ஒரு வகைப் போலித்தனத்துடன் கருத்துக்களை முன்வைத்து அவ்வப்போது அரசியல் லாபம் பெற மட்டுமே முயற்சிக்கிறார்கள். பொதுத் தேர்தல் மாகாணசபைத் தேர்தல் பிரதேச சபைத் தேர்தல் ஆகியன நடைபெறும் காலங்களில் மட்டும் மலையக மக்களுக்காக கண்ணீர் வடித்துக் கொள்ளும் இத் தலைமைகள் பேரினவாதக் கட்சிகளின் காலடியில் நின்று அடிமைத்தன அரசியல் நடத்துவதையே தொழிலாகக் கொண்டுமுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுசன முன்னணியும் பேரினவாத நிலைப்பாடு கொண்டவை என்பதைத் தெரிந்து கொண்ட பின்பும் அவர்களை விட்டால் பாராளுமன்ற ஆசனங்களுக்கு வேறு கதியே இல்லை என்றவாறே மலையகத்தின் தொழிற் சங்க அரசியல் தலைமைகள் யாவும் செயலாற்றி வருகின்றன. இவ்வாறு பதவி, பட்டங்கள் சுயநலத்தேட்டங்களுக்காக மலையக மக்களை விலை கூறி விற்று அரசியல் பிழைப்பு நடத்துவோர் தாங்களும் அடிமைகளாகி மலையக மக்கள் அனைவருக்கும் அவமானத்தையே தேடித் தருகின்றார்கள் என்பதே இளைய தலைமுறையினரின் குமுறல்களாக உள்ளது.

ஐயா தொண்டமான், அண்ணாச்சி செல்லச்சாமி, அண்ணன் சந்திரசேகரன், தம்பி ஆறுமுகம் மட்டுமன்றி அய்யாதுரை, ஓ.ஏ. இராமையா, சென்னன், சதாசிவம் தேவராஜ் போன்ற அனைவருமே பேரினவாதக் கட்சிகளில் ஒன்றையே பிடித்துக் கொண்டுள்ள நிலைதான். அதுவும் கூட காலம் சூழலுக்கு ஏற்றவாறு மாறி மாறிப் பிடித்துத் தொங்கிக் கொள்வதே இத்தலைமைகளது தொடர்ச்சியான நிலைப்பாடாகும்.

இத்தகைய அடிமைத்தன அரசியல் நடாத்தும் மலையகத் தலைமைகளால் மலையக மக்களுக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை. மக்கள் தமது சுயத்தைப் புரிந்து கொண்டு தங்கள் மீது நம்பிக்கை வைத்து தமக்குரிய தலைமைத்துவத்தையும் செல்லும் அரசியல் மார்க்கத்தையும் சிந்தித்து செயல் படுத்த முன்வரல் வேண்டும். எல்லாம் பணம் படைத்த தலைமைகளால் தான் தமக்கு வாழ்வு தரமுடியும் என நம்பும் நிலை கூட அடிமைத்தனத்தின் ஒரு வெளிப்பாடு தான். நம்மால் என்ன ஆகும் என்ற தாழ்வுணர்ச்சியும் படித்தவன் பணக்காரன் பெரியவன் என்ற அடிமைத்தன சிந்தனை நோக்கும் நமது மக்களிடமிருந்து அகல வேண்டும்.

தொழிற்சங்க அரசியல் தலைமைகளது ஏமாற்றுக்களை போலி வேடங்களை வெறுமனே விமர்சனம் செய்து விட்டு இருப்பதால் பயன் இல்லை. மாற்று அரசியலை மக்களை மையப்படுத்திய கொள்கை நிலைப்பாட்டை முன்னெடுக்க முன் வருதல் வேண்டும். அதுவே மலையக மக்களின் விடுதலைக்கு தேவையானதாகும். இக் கடமையை முன்னெடுக்க அர்ப்பணிப்புடன் கூடிய புதிய தலைமுறை முன்னுக்கு வந்தே ஆக வேண்டும். அது வரலாற்றின் தேவையுமாகும். அதனாலேயே மலையகத்தில் அரகோச்சி வரும் அடிமைத்தனம் மிக்க அரசியல் தொழிற்சங்க தலைமைகளை மக்கள் மத்தியிலிருந்து அப்புறப்படுத்தக் கூடிய வழிதோன்ற முடியும்.

*அட்டன் மா. அழகர்சாமி*

# அவலங்கள் நிறைந்த வவுனியா நகரம்

வவுனியா நகரம் சபிக்கப்பட்ட நகரமா ? என்றே எண்ணத் தோன்றுகிறது. அந்தளவுக்கு பேரினவாதத்தின் யுத்தக் கொடு மையின் தாக்கத்தால் அவஸ்தைப் படுகிறது. பல்வேறு அவலங்களுடன் அன்றாடப் பொழுதைக் கழிக்கிறது. மக்கள் பல்வேறு நிலைகளில் வழிகளில் விபரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஐந்துக்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்கள் என்னும் பெயரிலான முகாம்களில் இடம் பெயர்ந்த மக்கள் 'அடைத்து' வைக்கப்பட்டுள்ளனர். ஆண்களை விட பெண்கள் குழந்தைகள் வயோதிபர் என்போர் படும் துண்பங்கள் தாங்க முடியாத வைகளாகும். அடிப்படை வசதிகள் எதுவுமே போதியனவாக இல்லை. இங்கு வந்து பார்த்தால் தான் அதன் அவலங்களைக் காண முடியும். வருடக் கணக்கான இந்த முகாம் சிறை வாழ்க்கை எங்களுக்குப் பழக்கமாகி அதற்கு இசைவான வர்களாகி விட்டோம் என்றே கூறுதல் வேண்டும்.

முகாம் வாழ்க்கை தான் அவலமானது என்றால் வெளியே என்ன தான் வாழ்க்கை ? அதுவும் திறந்த வெளிச்சிறை முகாம் வாழ்க்கை தான். வவுனியாவில் மக்களை வாட்டி வதைத்து வரும் ஒன்றுதான் பாஸ் முறையாகும். தற்போது பதினைந்து வகையான பாஸ் முறை நடைமுறையில் உள்ளது. இந்த பாஸ் நடைமுறையைப் பின்பற்றுவதற்கு மக்கள் நாளாந்தம் நாயாக அலைக்கப்படுகிறார்கள். ஊண் உறக்கமின்றி பாஸ் பெற்றுக் கொண்டால் தான் வவுனியாவில் வாழ - இருக்க முடியும். இந்தப் பாஸ் பெற்றுக் கொள்வதற்கு நேரடிக் கெடுபிடிகள் ஒரு புறம் மறைமுக லஞ்சங்கள் தரகர்கள் மூலம் வேறு வேறு வசதிகள் எல்லாம் தானம் கொடுக்க வேண்டியே உள்ளது. பெண்களின் மானம் கூட தானமாக்கபட்டு வரும் அவலத்தை இங்கே காணவும் கேட்கவும் முடிகின்றது.

செயலகம். அரசாங்க திணைக் களங்கள் தொட்டு படையினரின் பாதுகாப்பு நிர்வாகங்கள் வரை மக்களைக் கயிறாகத் திரித்தே தமது நடைமுறைகளைச் செயல் படுத்துகிறார்கள். மக்களை எவ்வளவு கடைக்கோடி நிலையில் வைத்து வாட்டி வதைக்க முடியுமோ அந்தளவுக்கு செய்து தொலைக்கிறார்கள். யுத்தகாலத்தில் மனச்சாட்சி மனிதாபிமானம் என்பதெல்லாம் மரத்துப் போய் ஏதோ இந்த சந்தர்ப்பத்தில் அடிக்கிறதை எல்லாம் அடித்து கொள்வது என்ற நிலையிலேயே உயர் அதிகாரிகள் தொடக்கம் அடிநிலை ஊழியர்வரை நடந்து கொள்கிறார்கள். எங்கேயாவது ஒரிருவர் மட்டும் விதி விளக்கு.

வவுனியா வியாபாரத்தில் கொள்ளை லாபம் கோலோச்சுகிறது. போதாதென்று இயக்கங்களின் வரிகள் தரகுப்பணப் பிடுங்கல்கள் எல்லோரும் ஏறி மிதித்து தங்கள் தங்களை வளப்படுத்திக் கொள்ள கிடைத்தவர்கள் மக்கள் தான். மக்களிடமா பணம் இல்லை. அவர்களுக்குத் தானே வெளிநாட்டில் இருந்து வந்து கொண்டிருக்கிறதே. ஐந்துக்குப் பதில் ஐம்பது தரலாம்தானே என்ற பொதுவான மனநிலை முன்னின்று செயல்படுகிறது. நேரடியாகவோ மறைமுகமாகவோ கைநீட்டி இரக்கமற்று கையூட்டு வாங்கிக் கொள்வர்களிடம் இனப் பற்று, மொழிப்பற்று மக்கள் பற்று என்பதெல்லாம் வெறும் உச்சாடனங்களே. பணப் பற்றுத்தான் யாவற்றையும் விட முக்கியமானது.

இந்தப் பணத்தின் மீதான பேராசையினால் வவுனியாவில் பல நோயாளர்கள் கூட சாகடிக்கப் பட்டிருக்கிறார்கள். இங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறதோ இல்லையோ பணம் மட்டும் பச்சைத் தாள்களில் கறக்கப்பட்டு வருகிறது. அரசாங்க மருத்துவ மனையில் உள்ள நோயாளிக்கு வெளியே வைத்து ஒரு பச்சை நோட்டு தானம் வழங்கப்பட்டால் தான் வார்டில் உரிய சிகிச்சை கிடைக்கும் என்ற நிலைதான் வவுனியாவின் மருத்துவ நிலை. அரசாங்க வைத்தியர்கள் அங்கு உரிய கடமை செய்வதிலும் பார்க்க தத்தமது தனியார் வைத்திய நிலையங்கள் மூலம் பணம் பெருக்குவதிலேயே கவனமாக உள்ளனர். அத்தகையோர் மத்தியில் நேர்மையான மக்களுக்கு சேவை செய்யும் வைத்தியர்கள் இருக்கவே செய்கின்றனர் என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

வவுனியாவில் இடம் பெற்றுவரும் மக்களது அவலங்கள் பற்றி எவ்வளவோ பத்திரிகைகளில் வெளிவந்து விட்டன. அம்பலபடுத்தப்பட்ட விடயங்கள் தான் எத்தனை? ஆனால் எதுவுமே மாறியதாகவோ மாற்றமடைந்ததாகவோ காண முடியவில்லை. எல்லாம் எருமை மாட்டிற்கு ஈக்கடித்த நிலைதான்.

'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பது போன்றுதான் நடைபெறுகின்றன. அரசாங்கம் தனது பேரினவாத அடக்கு முறை ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல எவ்வாறு மக்கள் விரோதமாகச் செயல் படுகிறதோ அவ்வாறே அதன் அதிகாரிகள், ஊழியர்கள் செயல்படுகிறார்கள். இச் சந்தர்ப்பத்தை ஏனையவர்களும் தத்தமது சுய லாபம் கருதிச் செய்து கொள்கின்றனர்.

இத்தகைய மனித அவலம் வவுனியாவில் மட்டும் அல்ல. யுத்தத்தின் பிடிக்குள் இறுகி நிற்கும் வடக்கு கிழக்கின் அவலங்களும் இத்தகையதே. இருப்பினும் வவுனியாவிற்கு ஒருவர் வந்து அதன் அவலங்களை நேரில் கண்டு கொண்டலேயே அவற்றின் அகோரத் தனங்களை அனுபவித்துக் கொள்ள இயலும்.

**வவுனியா எஸ். சந்திரன்**

# நாலும் நடக்கும் உலகிலே

## வீரத் தமிழ்த் தலைமைகள்

தேசிய இனப்பிரச்சனை தொடர்பான கலந்துரையாடலுக்கு புதிய ஜனநாயகக் கட்சி அழைத்தபோது பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் வரவில்லை. தாங்கள் இணைந்து நடத்திய கலந்துரையாடலிலும் அழைக்காது தவிர்த்த தமிழ்க் கட்சிகள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இந்தியாவுக்கும் காவடி எடுக்கிற அதே வேளை தமிழர்கட்கு இழைக்கப்படும் கொடுமைகட்கு எதிராக இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள்.

1999ல் பலாலி காணிப்பறிப்புப் பற்றிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை புதிய ஜனநாயகக் கட்சி கொழும்பில் முன்நின்று நடாத்தியது. அப்போது ஓரிரு பிரமுகர் மட்டும் வந்து காட்சி தந்தனர். அங்கே புலிகள் போராடட்டும் இங்கே இடதுசாரிகள் போராடட்டும். பதவிகளை நாங்கள் பெற்றுக் கொள்கிறோம் என்பது தான் இவர்களுடைய அரசியல் வரலாறாக இருந்து வந்துள்ளது.

## தாத்தாமாரும் பேரர்களும்

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின இப்போது தன்னுடைய கட்சியின் பேரையே பாவிப்பதில்லை. தான் முன் நின்று குழப்பிச் சீரழித்த புதிய இடதுசாரி முன்னணியின் பேரையே பாவிக்கிறார். காரணம் விளங்க முடியாததில்லை. இந்த முன்னணியின் மூலம் தான் அவர் இப்போது சுமக்கிற சின்னப் பதவியே கிடைத்தது. இந்தப் பேரை வைத்துத் தான் சென்ற தேர்தலில் கிடைத்த சிறிதளவு வாக்குகளும் கிடைத்தன. சொந்தக் கட்சியின் பேரைக் கெடுத்து வெகுகாலமாகி விட்டதல்லவா.

இதே மாதிரிதான் பிலிப் குண்வர்தன என்கிற ட்டொட்ஸ்சியப் பிதாமகரும் செய்தார். 1956ல் பண்டாரநாயக்கவுடன் அவருடைய புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சி சேர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணியை உருவாக்கியது. 1959ல் பண்டாரநாயக கொல்லப்பட்ட பின்பு ம.ஐ. முன்னணி என்ற அமைப்பே இல்லாமல் போய் விட்டது. பிலிப் அந்தப் பெயரைத் தனதாக்கிக் கொண்டார். சொந்தக் கட்சியின் பேர் இல்லாமலே போய்விட்டது. அதன் பின்பு பிலிப்பின் அரசியல் சீரழிவு வெகு வேகமாகவே நடந்தது. கலாநிதி கருணாரத்தினவுடைய சீரழிவு எப்போதோ தொடங்கியது தான். அதைத் தடுக்க அவருடைய கட்சியில் யாருக்குமே திரண் உண்டா ?

## பரிசு படுத்தும் பாடு

பேராசிரியர் சிவத்தம்பியால் மாக்ஸிய விரோதிகளுக்கு மிகவும் வசதியாகிவிட்டது. குழப்பமான அவருடைய உரைகளை எல்லாம் மாக்ஸியமாகக் காட்டியும் தங்களுக்கு வசதியான மாதிரி எடுத்துக் சொல்லியும் அவர்கள் மகிழ்கிறார்கள். அவரும் விடாப்பிடியாக முத்துக்களை உதிர்த்து வருகிறார்.

தமிழகத்தில் தி.மு.க. அரசாங்கத்தால் அவருக்கு வி.க. விருது வழங்கப் பட்ட புளுகத்தில் தமிழகத்தில் அங்கீகரிக்கப் பட்டால் தான் ஈழத்து எழுத்துக்குப் பெறுமதி என்று சொல்லி வைத்தார். இவ்வளவு காலமும் ஈழத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவம் பற்றி தாங்கள் போராடி வந்ததெல்லாம் இந்திய வசிட்டர்கள் வாயால் பிரம்மரிஷி என்று ஏற்கப் படுவதற்காகத் தானா?

## ஜே.வி.பியின் பழைய பல்லவி

"கூரை ஏறிக் கோழி பிடிக்க இயலாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன மாதிரி" என்று ஒரு பழமொழி. ஜனவரிமாத முற்பகுதியில் ரி. என். எல். நடத்தும் ஜனஹண்ட நிகழ்ச்சியில் ஜனதா விமுக்தி பெரமுன சார்பில் கலந்து கொண்ட ஹேரத் எனும் பாராளுமன்ற உறுப்பினர் ஒடுக்கப்பட்ட சிங்கள முஸ்லிம் தமிழ் மக்களுக்கு எல்லாம் சம நீதி வழங்கப்பட்டால் தேசிய இனப்பிரச்சினையே இராது என்று பழைய வாய்பாட்டை ஒப்பு வித்தார். அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதெல்லாம் சரி, போரொன்று நடக்கிறதே அதை வைத்துக் கொண்டு எப்படி சமநீதி வழங்குவது, போரை எப்படி முடிவுக்கு கொண்டு வருவது ? அதைப் பற்றி அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவரோடு கூட அமர்ந்திருந்த மாற்றுக் கட்சிச் சிங்களப் பேரினவாதக் கருத்துக்களை எதிர்த்தும் அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இதுதான் ஜே.வி.பியின் இன்றைய நெருக்கடி.

## அந்நியருக்கு அடிபணியாமை

பயங்கரவாதத்தை முடிவுகட்டும் இலக்கில் அரசாங்கம் அந்நிய நாடுகளின் மிரட்டலுக்கு அடிபணியாது என்று பிரதம மந்திரி பிரகடனம் செய்துள்ளார். இந்த உறுதி நல்லது. இதே உறுதியை அயலார் நாட்டின் பொருளாதாரம் பற்றியும் மூலவளங்கள் பற்றியும் கல்வி, மருத்துவ வசதிகள் பற்றியும் அரசாங்கத்தை வற்புறுத்தும் போதும் காட்டினால் இந்த நாடு எவ்வளவோ நன்மை அடையுமல்லவா.

## புலிகளுக்கு அஞ்சாமை

பத்துத் தமிழ்க் கட்சிகளும் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சி அவர்களுடன் அரசாங்கம் பேச வேண்டும் என்று சொல்கிறதாக ஈ.பி.டி.பி எம்.பி. தவராஜா கண்டுபிடித்துள்ளார்.

ஒரு ஆண்டுக்கு முன்னர் கூட இதே பிரமுகரின் கட்சித் தலைவர் புலிகளுடன் பேச வேண்டும் என்று வற்புறுத்தினாரே.

கதிர்காமர் மட்டுமே புலிகளுக்கு அஞ்சாத தமிழ் அரசியல்வாதி போலத் தெரிகிறது. ஒரு வேளை அமைச்சர் பதவி கிடைத்தால் அச்சம் போய்விடுமோ தெரியாது.

## சந்தேக நபர்கள்.

தமிழ்ப் பத்திரிகையாளர்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இயங்குகிறவர்கள் விடுதலைப் புலி அனுதாபிகளாகச் சந்தேகிக்கப்படுவது புதியதில்லை. அரசாங்கச் சார்பில்லாத தமிழ் செய்தி ஏடுகளின் நிருபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவது பற்றி எல்லாருக்கும் தெரியும். இப்போது அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரை நிறுவனத்தின் தமிழ் ஏடான தினகரனின் பருத்தித்துறை நிருபரும் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகுள்ளாகியுள்ளார். பத்திரிகையாளர்கள் தொடர்ந்து இம்சிக்கப்படுவது கண்டனத்திற்குரியதாகும்.

இங்கே கவனிக்க வேண்டியது ஏதென்றால் அரசாங்க எதிர்ப்பு நிலைப்பாடுள்ள தமிழர்களோ அன்றி ஒரு விதமான நிலைப்பாடும் இல்லாத தமிழர்களோ மட்டுமல்ல அரசாங்க ஆதரவான தமிழர்கள் கூடச் சந்தேக நபர்கள்தான். இது அரசாங்க ஊழியர்கள் முதல் அமைச்சர்கள் வரை பொருந்துகிற உண்மைதான் என்பதை யாரும் எவரும் குறிப்பாக, அரசாங்கத்தின் தயவில் வாழ்க்கையில் முன்னேற நினைப்பவர்கள், மறக்கக் கூடாது.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

PUTHIYA POOMI

சுற்று 08 ஜனவரி/பெப். 2001 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 38


S. 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844

## போராட்டப் பேரெழுச்சியே மார்க்கம்

அன்று நமது நாட்டை பிரித்தானியர் முற்று முழுதான கொலனித்துவப் பிடிக்குள் வைத்திருந்தனர். அதனால் முழுமையாக இல்லாது விடினும் அரை குறையான உணவைத் தானும் வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டிருந்தனர். அவ்வாறு செய்வதன் மூலம் மக்களது எதிர்பு எழுச்சியைத் தடுக்கவும் முடிந்தது. இலங்கை போன்ற சிறிய சனத் தொகை கொண்ட நாட்டில் அது சாத்தியமாகவும் இருந்தது. அவ்வாறு உணவளித்து விட்டு நாட்டின் செல்வாதாரங்கள் அனைத்தையும் சுரண்டிச் சூறையாடிச் சென்றனர் அன்றைய கொலனித்துவ வாதிகள்.

ஆனால் இன்று அவ்வாறு உணவு வழங்கும் தேவையோ கவலையோ அற்ற நிலையில் அவர்கள் நாட்டின் மனித உழைப்பு உட்பட அனைத்துச் செல்வங்களையும் கொள்ளையிட்டுச் செல்கின்றனர். நவகொலனித்துவ வாதிகள் நாட்டு மக்களுக்கு உணவு வழங்கும் பொறுப்பை இந்நாட்டின் நிலவுடமை முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகளிடம் விட்டுக் கொண்டு சுரண்டல் கொள்ளையிடுதலை மட்டும் தமது கைகளில் எடுத்துக் கொண்டுள்ளனர்.

அன்றும் நாட்டையும் செல்வளங்களையும் காட்டிக் கொடுத்த அதே ஆண்ட பரம்பரையினர்தான் இன்றும் பல்தேசியக் கம்பனிகளுக்கு செங்கம்பள வரவேற்பு நடாத்தி பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். ஒரு முறை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது மறைந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பார்த்து மிகவும் தெளிவுடக் கூறியது இவ்வேளை நினைவில் கொள்ள வேண்டும். "அன்று அந்நிய கொலனித்தவ வாதிகளுக்கு உங்களது மூதாதையரும் எங்களது மூதாதையரும் சேர்ந்துதான் நாட்டைக் காட்டிக் கொடுத்தார்கள் என்ற உண்மையை மறந்து விடவேண்டாம்" என்று கூறினார். பிற்போக்கு வாதிகளிடமிருந்து அடிக்கடி இவ்வாறு உண்மைகள் வெளிவருவது வழக்கமானதாகும்.

இன்றும் நாட்டை ஆளுபவர்களும் அந்நிய ஏகாதியத்திய வாதிகளின் கால்களுக்கு கீழ் நவீன அடிமைகளாகக் கிடந்து நாட்டையும் மக்களையும் காட்டிக் கொடுத்து வருபவர்களும் அதே சேனநாயக்கா, ஜெயவர்த்தன, பண்டாரநாயக்கா, ரத்வத்தை குடும்பங்களின் வாரிசுகளே தான். இவர்களின் தலைமையில் தான் நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடிகளின் ஆளும் வர்க்க ஆட்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

பேரினவாத ஒடுக்கு முறையும் கொடிய யுத்தமும் சுரண்டிக் கொழுத்து நிற்கும் அந்நிய உள்ளூர் முதலைகளின் உண்மையான உருவத்தைப் பெரும்பான்மை மக்களிடமிருந்து மறைப்பதற்கான வலிமை மிக்கத் திரையேயாகும். இந்தத் திரையை இந் நாட்டின் உழைக்கும் வெகுஜனங்கள் தமது புரட்சிகர வெகுஜன எழுச்சி மூலம் எப்போது உடைத்தும் கிழித்தும் சுட்டெரித்தும் கொள்கிறார்களோ அன்று தான் நாடும் மக்களும் புதிய யுகத்தினுள் புகுந்து கொள்ள முடியும்.

நாடும் மக்களும் கடுமையான பொருளாதார நெருக்கடிகளினால் அமிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந் நிலைக்கு யுத்தமும் உலகச் சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்புமே காரணம் என்று ஆளும் தரப்பினர் கூறி வருகிறார்கள். யுத்தத்தை நாடாத்துவோர் யார் ? ஏன் யுத்தம் தொடரப்படுகிறது ? உலகச் சந்தையில் எரிபொருள் வர்த்தகத்தை தீர்மாணிப்பவர்கள் யார் ? இவற்றுக்கு நேர்மையான விடைகளை மக்கள் அறிந்து கொள்வது அவசியம்.

கடந்த இருபது வருடத் தொடர் யுத்தத்திற்கு பேரினவாத வெறி மட்டும் காரணம் அன்று. அந்த வெறியைத் தணிய விடாது தொடர்ந்தும் யுத்தப் போதை ஊட்டி வந்ததில் அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் பிரதான பாத்திரம் வகித்து வந்துள்ளனர். இன்று சமாதானத் தோற்றம் காட்டும் அமெரிக்க மேற்குலக சக்திகள் தான் இக் கொடிய யுத்தத்தின் பங்காளிகள். இத்தகைய பங்கில் இந்திய பிராந்திய மேலாதிக்கத்திற்கும் கணிசமான பங்கு உண்டு. இவர்கள் அனைவரினதும் அரவணைப்பு இன்றி யுத்தம் இன்றைய நிலையை அடைந்திருக்க முடியாது. தொடர்வதற்கும் வழி இருந்திருக்காது.

உலக எண்ணெய் - எரிபொருள் விலை உயர்வு என்பது அரபு நாடுகளுக்கு மட்டும் உரிய விடயம் அல்ல. அரபுலகிலிருந்து எரிபொருட்களை எடுத்து உலகம் பூராவும் வர்த்தகம் செய்து வரும் ராட்சத பல்தேசியக் கம்பனிகளின் கொள்ளை இலாபத்திற்காகவே விலைகள் உயர்த்தப்படுகின்றன. அதன் பரிய தாக்கத்தை மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் துயரங்களாக அனுபவிக்கின்றனர்.

இன்று நாம் எதிர் நோக்கி நிற்கும் யுத்த-பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணமான நவகொலனித்துவ பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கத்தையும் அதற்கு வழிகாட்டும் ஏதாதிபத்தியத்தையும் உரியவாறு அடையாளம் கண்டு எதிர்க்க வேண்டும். அதே வேளை அவற்றுக்கு இந்நாட்டில் சகல வாய்ப்பு வசதிகளை வழங்கி நிற்கும் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளை ஆட்சியதிகாரத்திலிருந்து தூக்கிவீச வேண்டும். இதற்கு ஒரே வழி வெகுஜனப் புரட்சிகரப் போராட்ட பேரெழுச்சியை நோக்கி முன்னேறுவதேயாகும்.

*ஆசிரியர் குழு*

## இலங்கையின் யுத்தத் தொழிற்சாலையில்

## 5 லட்சம் பேர் தொழில் புரிகிறார்கள்

தற்போதைய பேரினவாத யுத்தம் தொடரப்படுவதில் பொதுசன முன்னணி அரசாங்கம் தீவிரமாக நிற்கிறது. அதற்குரிய முக்கியமான காரணங்களில் ஒன்றை அரசாங்கம் மறைத்தாலும் சிஹல உறுமயவின் செயலாளர் திலக் கருணாரத்தினா தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அதாவது தற்போதைய யுத்தத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஐந்து லட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர் என்றும் இந்த யுத்தம் நிறுத்தப்பட்டால் பாரிய சமூகப் பாதிப்பு ஏற்படும் எனவும் மனுசன் உண்மையைக் கூறியுள்ளார். அத்தடன் அதிக நிதியை ஒதுக்கி யுத்தத்தை உக்கிரமாக முன்னெடுக்குமாறும் வேண்டியுள்ளார்.

திலக் கருனாரத்தினா எம்.பி. மட்டுமன்றி பெரும் வர்த்தகப் புள்ளியுமாவார். அவரிடம் இந்த யுத்தத்தால் கோடீஸ்வரர்களாக, லட்சாதிபதிகளாக மற்றும் செல்வச் சீமான்களாக மாறியவர்களின் நீண்ட பட்டியல் இருக்கவே செய்யும். எனவே அதனையும் அவர் வெளியிட்டால் அவரது பேரினவாதத்திற்கு வக்காலத்து வாங்கும் புள்ளி விபரம் பூர்த்தி பெற்றுக் கொள்ளும்.

மற்றுமொரு விடயத்தை இந்தப் பேரினவாதி விபரமாகச் சிங்கள மக்களுக்கு கூறிப் புரிய வைப்பாரானால் மிகவும் பயன் உள்ளதாகும். அதாவது இன்றைய யுத்தத்தின் மூலமாக முப்படைகளும் பொலீஸ் படையும் பல நவீன ரக ஆயுதங்களுடன் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. சகல விதப் பயிற்சிகளும் பெற்று தென் ஆசியாவில் இந்தியா பாகிஸ்தானுக்கு அடுத்த நிலை ஆயுதப்படைகளை முறையாகக் கட்டியமைத்துள்ள ஒரு நிலையில் காணப்படுகின்றது. இதே ஆயுதப் படை நாளை சிங்கள மக்களுக்கு எதிராகத் திருப்பி விடப் பட மாட்டாது என்பதற்கு ஏதாவது உத்தரவாதம் உண்டா ? 1971ல் 88-89ல் பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர் யுவதிகள் மக்களை வேட்டையாடி இரத்தப் பசி ஆறிக் கொண்ட அதே படை பட்டாளம் தானே இன்று நவீன ஆயுதங்களுடன் தமிழ் மக்களை வேட்டையாடி வருகின்றது.

நாளை சிங்கள மக்களை இதே படைகள் அடக்கி கொன்று குவிக்கும் நிலை வரும்போது திலக் கருணாரத்தினா என்ன விளக்கம் கூறுவார்.

பேரினவாதம் பேசி யுத்தத்திற்கு ஆள் சேர்த்து போர் முரசம் அறைவது இலகுவானது. ஆனால் அதன் எதிர் விளைவுகளுக்கு முகம் கொடுப்பது தான் கஷ்டமானது. திலக் கருணாரத்தினா, ரட்ணசிறி விக்கிரமநாயக்கா போன்ற வெளிப்படைப் பேரினவாதிகளாயினும் சரி மறைமுகப் பேரினவாத யுத்த வெறியர்களும் சரி வரலாற்றிலிருந்து எதையுமே படிக்கவில்லை என்பதையே அவர்களது பேச்சுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. 'முட்டாள்கள் கல்லைத் தூக்குவது முடிவில் தமது கால்களில் போட்டுக் கொள்வதற்கோயாகும்' என்பது நடைமுறை தரும் பாடமாகும்.

## குடாநாட்டைக் கொள்ளையிடும் கூட்டம்

### யுத்த காலத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது.

யாழ்-குடா நாட்டின் இழந்த பகுதிகள் அனைத்தையும் தாங்கள் மீளக் கைப்பற்றி விட்டதாகவும் முழுக் கட்டுப்பாடும் தமது கைகளுக்கு வந்துள்ளதாகவம் அரசாங்கமும் ராணுவமும் கூறி வருகின்றனர். இவ்வாறு மீளக் கைப்பற்றிய தென்மராட்சி யுத்த அழிவுகளால் சுடுகாடாகி மக்கள் மீண்டும் வசிக்க முடியாத அளவுக்கு அழிவுற்று காணப்படுகின்றது. வடமராட்சியிலும் வலிகாமத்திலும் இடம் பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் இன்னல்கள் அனுபவித்து வருகின்றனர். முழு யாழ் குடாநாடும் பல்வேறு புட்ட துன்பங்களையும் இடர்பாடுகளையும் அனுபவித்த வண்ணமே உள்ளது. அண்மைய டொலர் பெறுமதியின் அதிகரிப்பு மேலும் அங்குள்ள மக்களை அமுக்கியுள்ளது. அதே வேளை இதுவரை வழங்கப்பட்டு வந்த நிவாரணத்திலும் பாரிய வெட்டு வீழ்ந்துள்ளது.

இவ்வாறு மக்களை அமுக்கவும் ராணுவ அடக்குமுறைக்கு உள்ளாக்கவும் கூடிய காரியங்கள் தொடருகின்றன. அதற்கான தமது எதிர்ப்பை மக்கள் வெவ்வேறு நிலைகளில் வெளிப்படுத்தியே வருகின்றனர்.

இவற்றினிடயே யுத்த சூழலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பல வழிகளாலும் சூறையாடல்கள் மூலம் பணம் பண்ணுவோர் தத்தமது கைங்கரியங்களைச் செய்தும் வருகின்றனர். அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது யாழ் மாவட்ட எம்.பி. ரி. மகேஸ்வரன் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மீது ஊழல் மோசடிக் குற்றம் சுமத்தி அவருக்கு ஒன்பது வங்கிக் கணக்குகள் இருப்பதாகவும் கூறி அவர் மீது விசாரணை நடாத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதே பா. உ. யாழ் - ப. நோ. கூ. சங்க சமாஜத்தின் தலைவர் மீதும் ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். ஆனால் இதே பா. உ. மீது முன்பு பாராளுமன்றத்தில் மற்றொரு எம். பி. யான தவராஜா வர்த்தகத்தில் கொள்ளை லாபம் பெற்று மக்களைச் சுரண்டியவர் என்று குற்றம் சுமத்தியமையும் குறிப்பிடத் தக்கதாகும். இங்கே கவனிக்கத்தக்கது என்ன வென்றால் மக்களைச் சூறையாடி கொள்ளை யிட்டு வந்தவர்கள் எல்லோரும் இன்று ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி நிற்பதுதான்.

யாழ் குடாநாட்டிற்க்கு பொருட்களை எடுத்துச் செல்வதில் எழுபத்திரண்டு வர்த்தர்கள் ஈடுபட்டுள்ளனர் என அறிய முடிகிறது. இவர்கள் அனைவருமே குடா நாட்டு மக்களிடமிருந்து கொளை லாபம் அடிப்பவர்களே. யாழ் செயலகத்தின் அதி உயர் அதிகாரிகள், ஈ.பி.டி.பி கட்சியினர், யாழ் மாவட்ட பா.உ.வும் பிரபல வர்த்தக புள்ளியுமான ரி. மகேஸ்வரன் ஆகிய முத் தரப்பினரைச் சுற்றியே இந்த வர்த்தக முதலைகள் இருந்து வருகின்றன. இவர்களுக் கிடையில் மனக் கசப்பும் போட்டியும் ஏற்பட்டதால் ஒருவர் அடித்ததை மற்றவர் வெளிக் கொண்டு வந்து விடுவதாகவே காணப்படுகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு யாழ் செயலகத்தின் உணவுப் பொருட் களஞ்சிய சாலையில் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சூறையாடப் பட்டன. மக்களுக்குச் சேர வேண்டி அப்பொருட்கள் கை கூசாது கொளையிடப்பட்டன. அது சம்மந்தமாக ஒரு உயர் அதிகாரி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டு தற்போது நீதி மன்ற விசாரணையை எதிர்நோக்கி இருக்கிறார். ப. நோ. கூ. சங்கம் தற்போதைய சூழலில் மக்களது அன்றாட வாழ்வில் முக்கியத்துவம் பெறுகிறது. நிவாரணப் பொருட்கள் மேலிருந்து கீழ் வரை பல வெட்டுதல்கள் மூலம் கொள்ளை யடிக்கப்படுகிறது. இதில் கிராம சேவகர்களின் பங்கும் பணியும் குறிப்பிடத் தக்கதாகும்.

குடாநாட்டில் ராணுவ அடக்குமுறை ஒருபுறம் மறுபுறத்தில் அரசாங்க அதிகாரிகள் கூட்டுறவுத் துறையினர் மற்றும் நிர்வாக உயர் மட்டத்தினர் எங்கெங்கு பணம் பண்ண முடியுமோ அங்கெல்லாம் தமது கைவரிசைகளைக் காட்டி வருகின்றனர். தொலைபேசி இணைப்பு, மின்சார இணைப்பு போன்ற வற்றுக்கு கையூட்டு வழங்கியே தீர வேண்டும். இவற்றுக்கும் அப்பால் பிரதேச சபைகளின் கீழான 'அபிவிருத்திப்' பணிகளால் சிலர் பெற்று வரும் கொள்ளை லாபம் பலரைத் திகைப்படைய வைத்து வருகின்றது. இதில் பலர் திடீர் பணக்காரர்களாகியும் உள்ளனர்.

இவற்றை விட மக்களிடமிருந்து பணம் கறக்கும் மற்றொரு இடம் கொழும்புப் பிரயாணத்திற்கு பயணயச் சீட்டுப் பெற்றுக் கொள்ளும் நிலையமாகும். பயணச் சீட்டுக்கான கட்டணம் அளவுக்கு லஞ்சமாகக் கொடுக்கப்பட்டால் தான் பிரயாணம் நிச்சயம். முன்னைய இடத்தில் முறைகேடு எனக் கூறிப் புதிய இடத்தின் புதியவர்களும் பெறுப்பேற்றனர். ஆனால் முன்பை விடப் பல மடங்கு 'தானம்' கொடுத்தால் தான் கையில் பயணச் சீட்டுக் கிடைக்கும். இது பற்றி யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள மணியம் கட்டிடத்தைச் சுற்றிய இடங்களில் மக்கள் பேசிக் கொள்வதைக் கேட்டால் பயணயச் சீட்டின் மூலமான பணக் கொள்ளையை அறிந்து கொள்ளலாம். முன்பு துப்பாக்கி முனையில் கொள்ளை யிட்டவர்கள் இப்போது கொழும்பு பயணச் சீட்டில் கொள்ளை நடாத்துகிறார்கள் என்றே மக்கள் கதைத்துக் கொள்கிறார்கள்.

யுத்தகாலம். வெளிநாட்டுப் பணம் நேரடியாகவே யாழ்ப்பாணம் வந்து சேர்கிறது. இச் சந்தர்ப்பத்தை விட்டால் வர்த்தகர்கள் வியாபாரிகளுக்கும் ஜனநாயக நீரோட்டத்தில் நீந்திக் கொள்ளும் கட்சிகள் இயக்கங்களுக்கும் வேறு சந்தர்ப்பம் வர மாட்டாது என்பதும் உண்மைதான்.

ஆனால் மாபெரும் மக்கள் சக்தி யாழ் குடாநாட்டில் குமுறிக் கொண்டிருக்கிறது என்பதை இத்தகைய கொள்ளை நடாத்துவோர் அறிய மாட்டார்கள். இத்தகைய கூட்டத்தினருக்கு வால் பிடித்து வருபவர்கள் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஒரு நாள் மக்கள் சக்தியின் கேள்விகளுக்கு பதில் கூறியே ஆக வேண்டும். மக்களை அடக்குவோர், மக்களைக் கொள்ளையிடுவோர் மக்கள் மீது சவாரி செய்வோர் என்றுமே நிலைத்ததில்லை.

▲▲▲

## முஸ்லீம் காங்கிரஸ் தலைமைப் போட்டி

இலங்கை முஸ்லீம் மக்களுக்கு அரசியல் முகவரியைத் தேடித் தந்த கட்சியாக சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் காட்டப்பட்டு அதன் தலைவர் மறைந்த அஷ்ரப் போற்றப்படும் வந்தார். அவரது அகால மரணம் முஸ்லீம் காங்கிரசுக்கு பெரும் இழப்பாகியதுடன் வளர்ந்து நின்ற அக்கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டியையும் எழுப்பியுள்ளது. முஸ்லீம் காங்கிரஸ் கிழக்கில் இருந்து தோற்றம் பெற்ற போது இருந்த நிலையில் இன்று இல்லை. அது வசதிவாய்ப்பும் வர்க்க வளர்ச்சியும் பெற்ற முஸ்லீம் மக்களின் கட்சியாகி விட்டது. எனவே அதற்குள் மூண்டிருக்கும் தலைமைத்துவப் போராட்டம் சாதாரண முஸ்லீம்கள் சார்ந்த ஒன்றல்ல. இதுபற்றி அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அவசியம்

மலையக தமிழ் சமூகத்திற்கென தனியான பல்கலைக் கழகம் தேவை என்ற கோரிக்கையை பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் வலியுறுத்திவருகிறார். மலையகத்தின் ஏனைய கல்விசார், புலமைசார் புத்திஜிவிகளும் அக்கோரிக்கையை ஆதரித்து குரலெழுப்பி வருகின்றனர்.

பேராதனையில் இலங்கையில் முதலாவது பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படுவதற்கு காரணம் அங்கு நிலவும் சுவாத்தியம் மட்டுமல்ல. பெரிய நகரங்களில் அமையாமல் இலங்கையின் நிலப்பரப்பில் சாதாரண கிராமங்களையும் தோட்டங்களையும் இணைக்கும் இடத்தில் அமைந்தாலேயே இலங்கையின் சாதாரண மக்களுக்கான பல்கலைக்கழகமாக இருக்கும் என்பது நடேச ஐயரின் கருத்தாக இருந்தது. இலங்கையின் தனித்துவம், பண்பாடு என்பவற்றை மேம்படுத்தி வளர்க்க இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்பதில் பழைய இடதுசாரித் தலைவர்கள் உறுதியாக இருந்தனர். ஆனால் அது சாதாரண மக்களுக்கும் பயன்படக் கூடிய இடத்தில் அமைக்கப் பட வேண்டும் என்பதில் நடேச ஐயர் மிகவும் அக்கறையாக இருந்தார். அவரின் முன் முயற்சியினாலேயே பேராதனையில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது என்று அறிய முடிகிறது.

அப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டபோது ஓரினத்திற்கோ சாதிக்கோ ஒரு பிரதேசமக்களுக்கோ என்று அமைக்கப்படவில்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டபோது கூட தனித்தமிழ் பல்கலைக்கழகமாக அமைக்கப் படவில்லை. ஆனால் இன்று ஒவ்வொரு இனத்திற்கும் மாகாணத்துக்கும் என்று பல பல்கலைக்கழகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. அந்தவகையில் பார்க்கின்றபோது மலையகத் தமிழ் மக்களுக்கென ஒரு தனிப்பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதென்பது தவறான விடயமாக இருக்க முடியாது.

மலையகத்தமிழ் மக்களுடைய தனித்துவமான தன்னடையாளங்களை மேம்படுத்தி வளர்ப்பதற்கு ஒரு தனியான பல்கலைக் கழகமொன்றினால் பெரிதும் சேவை செய்ய முடியும். மலையகத் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்ற அடிப்படையில் பன்முகப்பட்ட வளர்ச்சிகள் எய்தப்பட வேண்டியது அவசியமாகும். பேரினவாத அடக்குமுறைகள் பூகோளமயமாதலின் அழிவுகள் என்பவற்றிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள மலையகத் தமிழ் மக்கள் உரிமையுடையவர்கள். அதற்கு கல்வி பண்பாட்டு வளர்ச்சி என்பது தேவையான வழிமுறையாகும்.

மலையக தமிழ் மக்களின் வளர்ச்சிகளில் மலையகத் தமிழ் புத்திஜீவிகள் 1960 களுக்கு பிறகு மீண்டும் ஸ்தாபனப்படுத்தப்பட்ட நிலையில் குரல் கொடுக்க முன்வந்துள்ளார். அவர்களின் கோரிக்கையாக வெளிப்படுகின்ற தனியான கல்கலைக்கழக கோரிக்கை திட்டமிட்ட வகையில் மக்களுக்குப் பயன்தரும் வகையில் முற்போக்கானதாக முன்னெடுக்கப்படவேண்டும்.

அவ்வாறான தனியான பல்கலைக்கழகத்திற்கு போதுமான மாணவர்கள் மலையக தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தேர்ச்சிப்பெற

## ஆரம்பமும் அடிப்படையும் சரியான திசையில் செல்ல வேண்டும்.

மாட்டார்கள், போதிய விரிவுரையாளர்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும் போன்ற காரணத்தை கூறி அக்கோரிக்கை ஒரு உயர்ந்த பட்சக் கோரிக்கை என்பதால் உசிதமானதொன்றல்ல என்று சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். மலையகத் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமென்றும் அவர்களுக்கு சுயாட்சி உரிமை தேவை என்றும் ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களே தனிப் பல்கலைக்கழக கோரிக்கையை எதிர்க்கின்றனர்.

தனிப்பல்கலைக்கழகத்திற்கான அமைவிடம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டி முறைகள், விரிவுரையாளர்கள் தெரிவு போன்றன பற்றிய திட்டவட்டமான விடயங்களை முன்வைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாக அறிய முடிகிறது. ஆரம்பமும் அடிப்படையும் சரியான திசையில் செல்ல வேண்டும். அதுவே மலையக மக்களுக்கு தேவையானதாகும்.

இவ்வாறான தனிப் பல்கலைக்கழக கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது அது யாருக்கு சேவை செய்வதாக அமைய வேண்டும் என்பதில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மலையகத்தமிழ் மக்களின் முன்னேறியவர்களுக்கு மட்டும் நன்மைப்பயப்பதாக அமைவதாகாது. பேராதனை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் படும்போது மலையகத்தமிழ் மக்களின் முன்னோடிகளில் ஒருவரான நடேசஐயர் கொண்டிருந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே மலையக தமிழ் மக்களுக்கான தனியான பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும். அதாவது சாதாரண குடிமகனின் பிள்ளைகளுக்காகவும் பல்கலைக்கழகம் திறந்திருக்க வேண்டும் என்பதே ஆகும்.

ஏகாதியத்திய பூகோளமயமாதலின் விரிவாக்கத்தின் கருவிகளாக மலையக புத்திஜீவிகள் ஆக்கப்பட்டு பூகோளமயமாக்கலின் விரிவாக்கமாக தனியான மலையகப் பல்கலைக்கழகம் அமைக்கபடலாகாது. குறிப்பாக இந்திய பிராந்திய மேலாதிக்கத்திற்கு உதவுமுகமாக அப்ப்ல்கலைக்கழகம் அமையலாகாது.

இலங்கை அரசாங்கத்தின் மீது உலக வங்கி சுமத்தி வரும் நிபந்தனைகளில் கல்வியை தனியார்மயம்படுத்துவது முக்கியமானதாக அமைந்துள்ளது. கல்வி முழுமையாக தனியார்மயமாக்கப்பட்ட பின்பு தோட்டத்தொழிலாளர்களுக்கும் கல்விக்கும் இருக்கும் இடைவெளி அதிகரித்து விடும். அபாயம் தோன்றவே செய்யும்.

இலவசக்கல்வியின் அடிப்படையிலான பல்கலைக் கழகமொன்றை வென்றெடுப்பதில் காலம் தாழ்த்தக்கூடாது. என்பதே தேவையானதாகும்.

❖❖❖

# காசு கறக்கும் "கம்பவாரிதிக்கு" மாக்ஸியர்கள் பற்றித் தெரியாது

## பழைமையின் மொத்த உருவமே உளறாதே !

பேராசிரியர் சண்முகதாஸ் மணிவிழாவை ஒட்டிக் கம்பவாரிதி (அதாவது கம்பர் பேர் சொல்லிக் காசு வாருகிற பிரகிருதி) இ.ஜெயராஜ் 21-01-2001 வீரகேசரியில் எழுதியிருந்தார். பேரா சண்முகதாஸ் அவர்களது ஆளுமை பற்றி அந்தக் கட்டுரையில் ஒன்றும் இல்லை. தெரிந்தால் தானே எழுத முடியும். பேரா. சண்முகதாஸுடன் தனக்கு இருந்த 'உறவு' பற்றி நீளமாக எழுதப்பட்டது. அதுபோக மார்க்ஸியவாதிகள் மீது அவதூறு பொழிவதற்குத்தான் கட்டுரை பயன்பட்டிருக்கிறது.

நம்முடைய மூதாதையர் வகுத்த வாழ்க்கை நெறிகள் பொய்மையானவை என்றும் மரபுச் சிந்தனைகள் எல்லாம் மடத்தனங்கள் என்றும் மாக்ஸியர்கள் சொன்னதைக் கேட்டு யாழ்பாணத்து அறிஞர்கள் பலரும் மருண்டார்களாம்.' மக்கள் போற்றிய சான்றோர்களை எல்லாம் குற்றவாளிகளாக்கிய மாக்ஸியர்கள், "கடவுளை அடைவதே வாழ்வின் நோக்கம் " என்று சொன்ன (எப்போது சொன்ன?) வள்ளுவரை மட்டுமன்றி கம்பரையும் சேக்கிழாரையுங் கூட இந்தப் பல்கலைக்கழக மார்க்ஸியர்கள் இழிவு செய்தார்களாம்.

இந்த மார்க்ஸியக் கொடுங்கோன்மையிலிருந்து யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிச் சீமையை மீட்ட வீரராக பிற்போக்குத் தனங்களைப் பாதுகாத்த ஒரு பேராசிரியராக சண்முகதாஸ் அவர்கள் அந்தப் பிரகிருதியால் நமக்கு முன் மீள்கட்டமைக்கப்பட்டுள்ளார். இதனைப் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் எந்தளவுக்கு ஏற்றுக் கொள்ளப் போகிறார். ஏனெனில் அவரும் தன்னை ஒரு மார்க்ஸிய வாதியாகவே கூறி வந்தவர் என்பது இந்த வம்பவாரிதிக்கு தெரியாது போலும். வஞ்சகப் புகழுரைகளிலும் விட மோசமான நிந்தனைகள் இல்லை. நேர்மையற்ற ஒருவருடைய பாராட்டுரையை விட இழிவான அவமதிப்பும் இல்லை. கம்பனுக்கும் அனுமானுக்கும் அதிகம் வேறுபாடு தெரியாத ஒரு பிறவி பற்றி அதிகம் எழுதிப் பயனில்லை. என்றாலும் தன்னுடைய விழா மேடைகளில் யாரை ஏற்றிக் காசு கறக்கலாம் என்பதைக் கம்பன் கம்பனி முதலாளிக்கு யாரும் கற்றுத்தர வேண்டியதில்லை. பொன்னாடைக்கு இன்ன தொகை, தலைமைக்கு இன்ன தொகை, விளக்கேற்றுவதற்கு இன்ன தொகை, சொற்பெருக்காற்ற இன்ன தொகை என்று விளம்பரம் பண்ணாத குறையாகக் கொழும்பில் கம்பன் விழாக் காணுகிறார் தமிழறியாச் செல்வந்தர்களை எல்லாம் தமிழ்மரபின் காவலர்களாக்குகிற இந்தக் கைங்கரியத்தில் பங்கு பெறுவதை எல்லாரும் ஒரு தகைமையாகக் கருதுவதாகவும் கட்டுரையில் உளறப்பட்டுள்ளது. இதை எண்ணிச் சிரிக்கத்தான் முடியும்.

சில அவதூறுகள் பற்றிச் சுருக்கமாக விளக்கி எழுதுவது யாழ் பல்கலைக்கழக வரலாறும் மாக்ஸியர் தமிழுக்கும் மரபுக்கும் ஆற்றிய பணி பற்றி அறியாதவர்கட்கு உதவும் என எண்ணுகிறேன். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் நிறுவப்பட்டபோதிருந்தே சில நல்ல நடைமுறைகள் புகுத்தப் பட்டன. வளாகத்தலைவரான கைலாசபதியும் கலைப்பீடாதிபதியான இந்திரபாலாவும் வளாகத்திற்குள் கார்களில் வராமை முதற்கொண்ட பல வகைகளிலும் எளிமை பேணினர். யாழ்ப்பாணச் சமூகத்துடன் பல்கலைக்கழகம் ஏற்படுத்திய நெருக்கம் முன்மாதிரியானது மட்டுமல்லாமல் மற்ற வளாகங்களுடன் ஒப்பிடுகையில் விலக்கானதுங் கூட. மக்களுடைய நேரடி ஆதரவு இருந்த காரணத்தாலேயே தமிழரசுக் கட்சியினர் பல்கலைக்கழகத்தின் மீது தொடுத்த யுத்தம் அந்தக் கட்சிக்கு ஒரு நன்மையையும் தராது போயிற்று.

மூதாதையரை மதிப்பதும் மரபை மதிப்பதும் அங்கங்கு உள்ள உயரியபண்புகளை அடையாளங் கண்டு நடைமுறைக்குப் பயன்படுத்துவதில் தங்கி உள்ளது. காலத்தாலும் சூழலாலும் பொருந்தாதவற்றை மறுப்பது மூர்க்கத்தனமான பழமை பேணல் மட்டுமே. சாதித் திமிரும் பெண்களைச் கீழாகக் கருதும் பார்வையும் கொண்ட கம்பவாரிக்கு மாக்ஸியவாதிகள் மரபின் பகைவராகவே தெரிவதில் வியப்பில்லை.

கம்பரை ஒரு மதப்பிரசாரகராக மாற்றுகிற சதி புதியதல்ல. கம்பருக்குள் இருந்த சமூக உணர்வு மிக்க மாபெருங் கவிஞரை அறிகிற தேவை மதத்தின் பேராலும் மரபின் பேராலும் மக்களை ஏய்க்கிற கூட்டத்துக்கு ஏன் இருக்க வேண்டும். எனவேதான் தமிழகத்தின் கம்யூனிஸ்ட் தலைவரான ப. ஜீவானந்தம் கம்பருக்கு ஆற்றிய பணியை மற்றவர்களால் ஆற்ற முடியவில்லை. சைவ சித்தாந்த பிரசாரகராக மட்டுமே அறியப்பட்டு வந்த ஆறுமுக நாவலரின் நவீனச் சிந்தனைகளை மாக்ஸியர்கள் தான் சரிவர அடையாளங் கண்டனர். மாக்ஸியர்கள் மரபின் எந்த மேதமைகளையும் இழிவு செய்ததில்லை. அவற்றின் குறை நிறைகளை வரலாற்றில் வைத்து ஆய்ந்தனர். இது தமிழ் இலக்கிய ஆய்வு பற்றி அறிந்த எவரும் மறுக்க இயலாத ஒரு உண்மை.

இடதுசாரிகள் என்றுமே வடக்கின் அரசியலில் ஆதிக்கம் செலுத்தவில்லை. கலை இலக்கியத் துறைகளிலம் சமூக ஆய்விலும் அவர்களது மேம்பாடு அவர்களது பங்களிப்புக்களின் உள்ளடக்கத்தின் விளைவானது தான். ஆட்டங் காணுகிற அறிஞர்கள் எங்கேயும் இருக்கிறார்கள். ஆட்டங்காணுகிற அறிவிலிகளும் அங்கே இருப்பார்கள். எங்கள் இலக்கிய அக்கறைகள் மக்கள் நலன் சார்ந்தவையே ஒழிய, மக்களை ஏமாற்றிப் பணம் பண்ணுகிறவை அல்ல.

உன்னை அறிந்தா தமிழை ஓதினேன் என்று வருந்திய கம்பனை அறியாமல் இன்று கம்பன் பேர் ஓதுகிறவர்கள் பின்னையதைச் செய்யலாம். என்றென்றைக்கும் அல்ல.

~அரண்மகன்

# இந்திய வம்சாவளி மகாசபையும் மலையக மக்களது கோரிக்கையும்

மலையக மக்கள் என அழைப்பதா அன்றி இந்திய வம்சாவளி மக்கள் என அழைப்பதா என்னும் விவாதம் சிறிது காலத்திற்கு முன்பு இடம் பெற்றது. இத்தகைய விவாதத்தில் மலையக மக்கள் எனக் கொள்ளப்படுவதே யதார்த்தமானதும் தூர நோக்கிலான உரிமைகள் வென்றெடுத்து நிலை நாட்டப்படுவதற்கு உரிய ஒன்றாகும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மலையகத் தமிழ் மக்கள் இந் நாட்டில் 175 வருடகால வரலாற்று வளர்ச்சியின் ஊடாக விபரிக்க முடியாத இன்னல்களுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தமது அடிப்படை உரிமைகளுக்காகப் போராடியும் பெற்றும் பெற வேண்டிய நிலையிலும் இருந்து வருகிறார்கள். அவர்கள் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பது உண்மையாயினும் தாங்கள் இலங்கையர்களில் ஒரு இன வர்க்கம் பிரிவினர் என்பதையே தொழிற்சங்க அரசியல் போராட்டங்களின் போது வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு போதும் இந்தியாவிற்கு திரும்பிப் போவதற்கான இயக்கத்தையோ அன்றி கோரிக்கையையோ முன் வைக்கவில்லை. ஆனால் கட்டாய நாடுகடத்தலுக்கே ஆளாக்கப்பட்டனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்தியன் காங்கிரஸ் என்பது ஓரிரு ஆண்டுகளிலேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என பெயர் மாற்றப்பட்டது. அதன் உள்ளார்ந்தம் இலங்கைக்குரிய அடையாளத்தை வலியுறுத்துவதேயாகும். இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது அடையாளத்தை இலங்கையர்களில் ஒரு பிரிவினராக வற்புறுத்துவதையே இலக்காக கொண்டு வந்துள்ளனர். தமது இனத் தனித்துவங்களையும் சமூக கல்வி கலாச்சாரங்களையும் சுயமாகப் பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர். அதன் மூலமே இன்று மலையக மக்கள் தம்மை சிறுபான்மைத் தேசிய இனமாக அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் என்னும் நிலைக்கு வந்துள்ளனர்.

இந்நிலையைக் குழப்பித் திசை திருப்ப அவ்வப்போது சிலவகை முயற்சிகள் இடம் பெற்றும் வந்துள்ளன. அதில் ஒன்றே "இந்திய வம்சாவளி மக்கள் மகாசபை" என்னும் அமைப்பின் மூலமான முயற்சிகளாகும். இந்த அமைப்பிற்கும் ஏகப்பெரும்பான்மையான தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பந்தம் இருக்க முடியாது. ஏனெனில் அது இந்திய வம்சாவளி என்னும் நாமகரணத்தைப் பெரிதாகக் காட்டிக்கொண்டு அதன் மறைவில் பெரும் வர்த்தகர்கள் வியாபாரிகள் உயர் பதவியில் உள்ள ஓரிரு புத்திஜீவிகள், உயர் வர்க்க அரசியல் வாதிகள் என்போர் தமது நலன்களை பேணுவதற்கான முயற்சிகளேயாகும்.

இவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் மட்டுமன்றி இந்திய அரசாங்கத்துடனும் ஆதாயம் பெற நிற்பது மட்டுமன்றி இந்திய அரசாங்கத்தின் இலங்கை மீதான மேலாதிக்க விஸ்தரிப்பு நோக்கங்களுக்கு உதவிகொள்வதேயாகும். இத்தகைய மகா சபைகளையிட்டும் அதன் தலைமைப் புள்ளிகளையிட்டும் மலையக மக்கள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள் கவனத்துடன் இருப்பது அவசியமாகும்.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி வலியுறுத்தப்படும் இவ்வேளை மக்கள் தமக்குரிய உரிமைகளை வென்றெடுக்க உரிய வழிமுறைகளை முன்வைக்க வேண்டுமே தவிர மங்கி மறைந்து வரும் இந்தி அடையாளத்தை வற்புறுத்தி தனிமைப்பட்டுக் கொள்ள முடியாது. நாம் இலங்கைவாழ் மலையகத் தமிழர். நமக்குரிய அடிப்படை இனவர்க்க உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் நாம் சுதந்திரமாகவும் சுயகௌரவத்துடனும் அனைத்து மக்களுடனும் இணைந்து வாழ்வோம். இதை விடுத்து இந்திய அடையாளத்தைப் பயன் படுத்தி தமது உயர் வர்க்கத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள நிற்கும் வர்த்தகர்கள் வியாபாரிகள் மற்றும் செல்வச் சீமான்களுக்காக நமது கோரிக்கைகளை தாரை வார்த்துக் கொள்ள இயலாது என்பதை ஒவ்வொரு மலையகத் தமிழ் மகனும் எடுத்துக் கூற வேண்டும்.

இராகலை. வி. குமார்

❖❖❖

நன்றி - நூலகத்திட்டம்



# நோர்வேயின் முயற்சியும் எதிர்வினைகளும்

**நமது அரசியல் நிருபர்**

அயலார் தலையீடு இல்லாமல் நமது தேசிய இனப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பது நெடுங்காலமாகவே இலங்கையின் மாக்ஸிய லெனினியவாதிகளது விருப்பமாகும். ஆனால் போர் நிறுத்தத்திலும் பேச்சுவார்த்தைகளிலும் ஒரு மூன்றாந்தரப்பு நடுவர் வரக் கூடாது என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்கவில்லை. அவர்களுடைய நிலைப்பாடு ஏதெனில், மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம், பொதுவாகவே, மோதுகிற இருதரப்பினரதும் முரண்பாட்டில் வேறொருவரது நலனைப் வேணுவதாகவே அமைந்துள்ளது என்பதால், முடிந்த வரை, நேரடியான பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு தீர்வை வந்தடைவது நல்லது என்பதுதான். ஆனால் நேரடியான பேச்சுவார்த்தைகள் இயலாத சூழலில் அதை இயலுமாக்கும் இன்னொருவரின் உதவியை அவர்கள் அறவே நிராகரிக்கவில்லை. எவ்வாறாயினும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிய எச்சரிக்கை உணர்வு அவசியமானதும் எப்போதும் இருக்க வேண்டியதும் ஆகும்.

சேர்பிய தேசியவாதத்தின் யூகோஸ்லாவியாவைப் பிளவு படுத்துவதில் மேலாதிக்கப் போக்குக்கு ஒரு பங்கு இருந்தது. ஆனால் அதைப் பயன்படுத்தி ஒரு போர்ச் சூழலை உருவாக்குவதில் ஏகாதியத்திய வாதிகளின் தூண்டுதலும் முக்கியமான பங்கை அளித்தது. அமைதி பற்றியும் சமாதானத் தீர்வு பற்றியும் நீதி பற்றியும் பேசிக் கொண்டே, பொஸ்னியாவிலும் பின்பு கொசோவோ மாகாணத்திலும் அ்மெரிக்க வழிகாட்டலில் ஐ.நா. படைகளும் நேற்றோ படைகளும் குறுக்கிட்டன. இக் குறுக்கீடுகளால் ஏற்பட்ட அழிவும் உருவாக்கப்பட்ட ஆழமான இனப்பகையும் பற்றி ஏகாதிபத்தியச் செய்தி நிறுவனங்கள் பூசி மழுப்பினாலும் இன்று உண்மைகள் வெளியாகி வருகின்றன.

பதிநான்கு ஆண்டுகட்கு முன்பு நாம் ஒரு மூன்றாம் தரப்பு அமைதி காத்தலை அனுபவித்தோம். அதன் பாடங்களைச் சிலர் மறக்க விரும்பினாலும் தமிழ் மக்கள் மறப்பதற்கில்லை. எனவே தான், எந்த மூன்றாம் தரப்புப் பற்றியும் எச்சரிக்கை உணர்வு தேவையாகிறது.

சில தமிழ் அரசியல் கட்சிகள் ஐ.நா. தலையீடு பற்றியும், வேறு சில, இந்தியா உள்ளிட்ட தென்னாசியப் பிராந்திய அமைதிப்படை பற்றியும் பேசிவந்துள்ளன. ஆனால் இவை நடைமுறைப்படுத்தப் படுவதற்கு வேறு அரசியல் நிபந்தனைகளையும் நிறைவு செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளதை இவர்கள் உணர்வதில்லை.

நாட்டின் மக்கள் அனைவரும் அமைதியை விரும்புகின்றனர். போரின் மூலம் நேரடியான அல்லது மறைமுகமான லாபம் பெறாத முதலாளிமாரும் அயல் முதலீட்டாளர்களும் கூட விரும்புகின்றனர். இலங்கையில் தொடருகிற போர் தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்க மேலாதிக்கத்துக்கு மேலும் உதவமாட்டாது என்ற சூழ்நிலையிலேயே, அமெரிக்க ஏகாதிபத்தியம் அமைதிக்குச் சாதகமான ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது. விடுதலைப் புலிகள் மீதான தடையும் இலங்கை அரசாங்கத்திற்குச் சாதகமான அதன் நிலைப்பாடும், பேரினவாத அரசின்



வெற்றிக்கு உதவவில்லை. சென்ற ஆண்டு, ஆனை யிறவுத் தோல்வியை அடுத்து, தயக்கத்துடன் அமெரிக்கா இந்தியக் குறுக்கீட்டுக்குச் சாதகமான ஒரு நிலைப்பாட்டை எடுத்தாலும், பிராந்தி மேலாதிக்கம் பற்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் இந்திய விஸ்தரிப்புவாத அரசுக்கும் இடையே பாரிய முரண்பாடுகள் உள்ளன. இதன் பின்னணியிலேயே நோர்வேயின் சமாதான முயற்சியை நாம் காண வேண்டும்.

நோர்வே, ஜே.வி.பி. தலைமை இட்டுக் கட்டிச் சொல்வது போல ஒரு ஏகாதிபத்திய நாடென்று யாரும் நம்ப இடமில்லை. இலங்கையின் கடல்வளத்தைத் தனது ஏகபோகமாக்கவே நோர்வே முயலுகிறது என்பது, ஜே.வி.பி. தனது பேரினவாதத்தை மூடிக் கட்டப் பாவிக்கும் ஒரு ஏகாதிபத்திய விரோதப் பாசாங்கே ஒழிய வேறல்ல. அதே வேளை, நோர்வே அமெரிக்காவினதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் பூரண ஆசியுடன் தான் சமாதான முயற்சியில் இறங்கியுள்ளது என்பது பற்றி நாம் அறியாதது போல இருக்க முடியாது. அப்படியானால், நோர்வேயின் சமாதான முயற்சி ஒரு ஏகாதிபத்தியச் சதியா என்று சிலர் கேட்கலாம்.

நோர்வே நேரடியாகவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கத்தைச் சார்ந்து செயற்படுவதாகச் சொல்ல இயலாவிடினும் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களை நோர்வேயின் முயற்சிகளின் மூலம் பேணும் சாத்தியப்பாட்டை நாம் மறுக்க இயலாது. வெளியாரின் எந்தச் சமாதான முயற்சியும் ஏதாவது மேலாதிக்க நலன் சார்ந்து அமையும் வாய்ப்பு உண்டு என்பது பொதுவான உண்மை. அந்த அடிப்படையில் பார்த்தால், அமைதிக்கான எல்லா முயற்சிகளையுமே நிராகரிக்கத் தான் நேரிடும்.

நோர்வேயின் முயற்சியை இயலுமாக்குகிற சூழ்நிலை என்ன? கடந்த பதினெட்டு வருடக் காலப் போராட்டக்கால அனுபவமும் அதற்கு முன்பு சிங்களப் பேரினவாத ஆட்சிகளோடான உடன்படிக் கைகளின் முறிவின் அனுபவமும் அண்மைக் காலமாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள கடும் போக்கும் விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கத்தின் எந்த இனிய சொற்கள் மீதும் நம்பிக்கை கொள்ள நியாயத்தைத் தரவில்லை. மறுபுறம், தென்னிலங்கையில் உருவாக்கி வளர்க்கப்பட்டுள்ள பேரினவாத அரசியலும் இன விடுதலைப் போராட்டத்தை வெறும் பேரினவாத அரசியலும் இன விடுதலைப் போராட்டத்தை வெறும் பயங்கரவாதமாகக் காட்டி நிராகரிக்கும் போக்கும், அரசு விடுதலைப் புலிகளுடன் நேரிற் பேசப் பாதகமான ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதன் உருவாக்கத்தில் விடுதலைப் புலிகளின் போராட்ட முறைகளின் தவறுகளை நாம் மறுக்க முடியாது. ஆயினும் பேரினவாத அரசயற் தலைமைகளின் கடும் போக்கே முக்கியமான காரணமாகும். இவ்வாறு, பேரினவாதம் தான் பின்னிய வலையில் தானே சிக்கித் தடுமாறுகிறது.

அரசாங்கம் என்னதான் அமைதி மனித உரிமைகள், நியாயமான தீர்வு என்பன பற்றிப் பேசினாலும் அதன் நடத்தை மேலும் மேலும் அதற்கு எதிரான திசையிலேயே அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியலும் போராட்ட முறையும் பற்றிய எத்தனை கருத்து முரண்பாடுகளின் நடுவிலும் அவர்கள் சமாதானத்திற்கு ஆயத்தம் என்று அறிவித்தமையும் போர்நிறுத்தமும் அரசாங்கத்தையும் பிற பேரினவாதிகளையும் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது. அரசாங்கத்தால் நோர்வேயின் முயற்சிகளை நிராகரிக்கவும் முடியாமல் ''போர் மூலம் அமைதியை'' உண்டாக்கவும் முடியாமல் உள்ளது. எனவே சமாதான முயற்சிகளைக் குழப்பும் வேலைகள் அரசாங்கத்தினுள்ளிருந்து வேறு விதமாக மேற்கொள்ளப்படுகின்றன. பிரதமரின் இனவாத விஷம்கக்கும் உரைகளும் உதவிப் பாதுகாப்பு அமைச்சரின் போர்க் கூச்சலும் விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தின் நடுவே கைப்பற்றிய யுத்ததந்திர முக்கியமற்ற பிரதேசங்கள் பற்றி அரச சார்புப் பத்திரிகைகளின் கொக்கரிப்பும் இதன் ஒரு பகுதி. இதற்கும் மேலாக, வெளிநாட்டு அமைச்சரும் அரசாங்கத்தில் பங்காளியாக இணைந்துள்ள ஒரு முன்னாள் போராளி இயக்கத் தலைமையும் விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு மாறாகத் தம்மாலானதைச் செய்கின்றன.



ஜே. வி. பியினதும். சிஹல உருமயவினதும் ஒரு முக்கிய நோக்கம் சிங்களப் பேரினவாதத்திற்குத் தீனி போட்டு அரசியல் ஆதாயம் தேடுவது. யூ.என்.பியின் நிலைப்பாடு இப்போதைக்கு நோர்வே மத்தியஸ்திற்குச் சாதகமானதாயினும் தீர்வு என்று வரும் போது, அதன் கடந்தகாலத்தைப் பற்றி யோசியாமல் இருக்க முடியாது. ஆயினும் இவற்றுக்கு வேறு பின்னணிகள் உண்டா என்று நாம் கவனிக்க வேண்டும்.

## மறைந்திருந்து குழிபறிக்கும் இந்திய அதிகார வர்க்கம்

பாரதிய ஜனதா ஆட்சி பற்றித் தமிழரிடையே பல கனவுகள் வளர்க்கப்பட்டன. விடுதலைப் புலிகள் மீதான தடையை பாரதிய ஜனதா ஆட்சி இரண்டு முறை நீடித்த பின்னும் சிலருடைய மயக்கம் தெளிய வில்லை. கருணாநிதி, சென்ற மாதம் இந்திய அரசு தன் தேசிய நலனுக்காக இலங்கையில் குறுக்கிடுவது பற்றி உடன் பட வேண்டிய ஒரு நிலையில் இருந்ததையும் தொடர்ந்து அவர் விடுதலைப்புலிகளுக்கு மாறாகப் பேசி வருவதையும் நாம் இந்திய மேலாதிக்க நோக்கங்களிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. பா.ம.க.

*9ம் பக்கம் பார்க்க*

# வெகுஜன எழுச்சியின் வெற்றியும் அடக்குமுறையின் தோல்வியும்

அண்மையில் வடக்கே குடாநாட்டிலும் கிழக்கே மட்டக்களப்பிலும் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை ஆகிய மூன்று அம்சங்கள் வலியுறுத்தப்பட்டு மாணவர்-மக்கள் எழுச்சி முன்னெடுக்கப்பட்டன. இவை மிகவும் வரவேற்கப்பட வேண்டிய நிகழ்வுகளாகும். மேன்மேலும் அவற்றுக்கான வெகுஜனப் போராட்டங்கள் பரந்த அளவில் முன் செல்லுதல் வேண்டும்.

மேற்படி யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சுய நிர்ணய உரிமை ஆகிய மூன்று அம்சங்களின் அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பது ஏற்கனவே தெற்கிலும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. 1997ம் ஆண்டு முதல் பாராளுமன்றத்திற்கு வெளியே உள்ள இடதுசாரிக் கட்சிகள் மக்கள் மத்தியில் வெகுஜன இயக்கமாக அதனை முன்னெடுத்தும் வந்துள்ளன. புதிய ஜனநாயக கட்சி உட்பட ஆறு இடதுசாரி அமைப்புகள் ஐக்கியப்பட்டு மேற்படி மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தியதுடன் தனியார் மயத்தையும் அதனுடன் இணைத்து முன்னெடுத்து வந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தெற்கின் பல்வேறு மாவட்டங்களிலும் இதற்கான கருத்தரங்குகள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வீதி நாடகங்கள் போன்றன நடாத்தப்பட்டன. மாகாணசபைத் தேர்தலின் போதும் இதே அம்சங்களை முன்னிறுத்தியே பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் வடக்கு கிழக்கில் மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து பரந்த மக்கள் இயக்கத்தை முன்னெடுக்க முடியவில்லை. அங்குள்ள யுத்த சூழலும் ராணுவ அடக்கு முறையும் வெகுஜனப் பிரசாரத்திற்கு தடையாக இருந்து வந்தன.

இருப்பினும் புதிய ஜனநாயக கட்சி தனது சக்திக்கு உட்பட்ட வகையில் மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து பிரசாரம் செய்தே வந்தது. மேதினக் கூட்டங்களிலும், ஏனைய சிறு சிறு கருத்தரங்குகளிலும் இதனை வலியுறுத்தி வந்துள்ளதுடன் கடந்த பொதுத் தேர்தல் காலத்தின் போது இக் கோரிக்கைகளை மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்லுவதற்கு உரிய சந்தர்ப்பமாக பயன்படுத்தியும் கொண்டது. யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படுவது தவிர்க்க முடியாத அரசியல் யதார்த்தமாகி நின்கின்றது. இதனையே அண்மைய வெகுஜனப் போராட்ட எழுச்சி நிகழ்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக் கழக சமூகம் பொங்கு தமிழ் எழுச்சி என்னும் நிகழ்வின் மூலம் இம் மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து மாணவர்களையும் மக்களையும் அணிதிரளுமாறு வேண்டிக் கொண்டது. குடாநாட்டின் ராணுவ நிர்வாகம் அரசாங்க சார்புக் கட்சியான ஈ.பி.டி.பி மற்றும் அரசாங்க எடுபிடிகளின் தலையீடு, குறுக்கீடு, அடக்குமுறை அச்சுறுத்தல் போன்ற சகலவற்றையும் மீறி மாணவர்கள் மக்கள் நியாயமான கோரிக்கையின் பக்கம் அனிதிரண்டு 17-01-2001ல் தமது பலத்தை வெளிப்படுத்தியுள்ளனர். சுமார் பதினையாயிரம் மாணவர்கள், மக்கள் இப் பொங்கு தமிழ் எழுச்சியில் பங்கு கொண்டனர். தடைகளும் அச்சுறுத்தல்களும் இன்றி சுதந்திரமாக மேற்படி நிகழ்ச்சி நடைபெற அனுமதித்திருந்தால் சுமார் ஒரு லட்சம் மக்கள்- மாண்வர்கள் கலந்திருக்கும் நிகழ்ச்சியாகி இருக்கும் என்றே கணிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் ராணுவ அச்சுறுத்தலின் மத்தியிலும் இக் கோரிக்கைகளை வலியுறுத்தி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் மக்களும் தமது வெகுஜன எழுச்சிப் பலத்தை வெளிக்காட்டினர். ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தமது ஒன்றுபட்ட குரலை வெளிப்படுத்தினர்.

யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை சுயநிர்ணய உரிமை என்பனவற்றுக்கான இம் மக்கள் எழுச்சி மென்மேலும் பரந்த அடிப்படையில் வடக்கு கிழக்கிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்கலிலும் விரிவுபடுத்தி முன்னெடுக்கப்படுவது இன்றைய காலத்தின் அவசிய தேவையாகும். இது வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்குரிய பிரச்சினை மட்டுமன்று வெளியே வாழும் தமிழ் மக்களுக்கும் அவசியமானதொன்றாகும். அது மட்டுமன்றி முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களையும் உள்ளடக்கியதொன்றாகும். மேலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் சிங்கள மக்களுக்கும் இம் மூன்று கோரிக்கைகளும் தேவையானவை யேயாகும்.

இன்றைய கொடுமை மிகுந்த யுத்தமும் பாரிய பொருளாதார நெருக்கடிகளும் முழு நாட்டையும் மக்களையும் நாளாந்தம் தாங்க முடியாத துன்பதுயரங்களுக்கு ஆளாக்கி வருகின்றன. பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தையும் தாராள தனியார் மயக் கொள்கையையும் முன்னெத்து வரும் அரசாங்கத்தை எதிர்த்து மக்கள் நீதியான கோரிக்கைகளின் அடிப்படையில் அணி திரள வேண்டிய காலம் வந்து விட்டது.

அரசியல் வெகுஜன எழுச்சிப் போராட்டங்களில் எப்பொழுதும் முன்னணியில் இருந்து வந்த வடபுலம் மீண்டும் அதே பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளமை வரவேற்கப்படவேண்டியதேயாகும். யாழ் பல்கலைகழக சமூகம் அதன் முனையாகி நிற்பது போற்றக குரியதாகும். பல்கலைக் கழக சமூகம் தன்னுள் ஐக்கியப்பட்டிருப்பதும் வெளியே மக்களை ஒன்றிணைக்க முற்பட்டுள்ளமையும் வெகுஜனப் போராட்டப் பாதையில் எடுத்துள்ள சரியான அடியெடுப்பாகும். இது மிக நிதானமாக முன்னெடுக்கப்படல்

*8ம் பக்கம் பார்க்க*

நன்றி - நூலகத்திட்டம்



# எதிரானவர்களை ஓரம்கட்டுவதில் அமிர்தலிங்கம் வல்லவர்

## அண்ணன் காட்டிய வழி (5)

இமயவரம்பன்

செல்வநாயகம் 1952ம் ஆண்டு தேர்தலில் தோல்வி கண்ட போதும் அதே ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற வன்னிய சிங்கமோ ராஜவரோதயமோ அவருடைய தலைமையைக் கேள்விக்கு உட்படுத்தவில்லை. 1956ம் ஆண்டுத் தேர்தலை தைரியத்துடன் எதிர்பார்க்கக் கூடிய சூழல் வரும்வரை செல்வநாயகம் பொறுமையுடனும் நிதானத்துடனும் இருந்தார். சரியான காரணங்கட்காகவோ தவறான காரணங்கட்காகவோ தன்னுடன் முரண்பட்டவர்களை ஓரங்கட்டுவதற்கு அவர் அதிகம் சிரமப்படத் தேவை இருக்கவில்லை. அவருடன் கடுமையாக முரண்பட்டவர்கள் கட்சியிலிருந்து விலகி அரசியலிலிருந்தே ஒதுங்க வேண்டி வந்ததற்கு அன்றைய அரசியற் சூழ்நிலையும் சாதகமாயிருந்தது.

தமிழரசுக்கட்சியின் செல்வாக்குச் சரியத் தொடங்கிய பிறகு, செல்வநாயகத்தின் இடத்தை நிரப்ப ஆவல் கொண்ட அமிர்தலிங்கம் 1970ம் ஆண்டு தோல்வியால் மிகவும் பாதிக்கப்பட்டார். 1952ல் செல்வநாயகம் கண்ட தோல்வி தமிழரசுக் கட்சியின் அன்றைய அரசியல் பலமின்மையின் அடையாளமே அல்லாமல் செல்வநாயகத்தின் குறைபாடாகத் தமிழரசுக் கட்சியினரால் காணப்படவில்லை. வலுவான நிலையில் இருந்த ஒரு கட்சியின் சரிவின் போது அமிர்தலிங்கம் பெற்ற தோல்விக்கு அவருடைய தனிப்பட்ட குறைபாடுகளையே முக்கியமான காரணமாகத் தமிழரசுக் கட்சியில் இருந்த பலரும் கண்டனர். அமிர்தலிங்கம் தன் குறைபாடுகளைக் களைவதில் அதிக நாட்டம் செலுத்தியதாக நம்ப இடமிருக்கவில்லை.


1952க்குப் பின் தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்தது வெகுஜனங்களுடனான நல்லுறவு கட்சியின் கீழ் மட்டத் தொண்டர்கள் அணுகக்கூடிய நிலையில் அதன் தலைவர்கள் பலர் இருந்தனர். பாராளுமன்றப் பதவியும் அரசாங்க அதிகாரத்தில் பங்கும் வெகுசனங்களுடனான உறவைப் பாதிக்க விடாமல் கவனித்துக் கொண்டவர்கள் வெகுசிலரே. அமிர்தலிங்கம் அவர்களுள் ஒருவரல்ல. 1970-77 கால இடைவெளியில் தீவிரவாத இளைஞர்களுடனான அவரது நல்லுறவு அவருடைய அணுகுமுறையில் ஒரு அடிப்படையான மாற்றம் அல்ல என்பதை 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னரே காண முடிந்தது.

தனக்கு எதிராகத் தமிழரசுக் கட்சிக்குள் சவால் விடக் கூடிய எவரையும் ஓரங்கட்டுவதில் அமிர்தலிங்கம் முனைப்புடன் செயற்பட்ட அதே வேளை எந்த ஜி.ஜி. பொன்னம்பலத்தை மிகவும் மோசமாக ஏளனம் செய்தாரோ அதே ஜி.ஜி. பொன்னம்பலத்துடன் தன்னை நெருக்கமாக்கிக் கொள்ள முற்பட்டார். அமிர்தலிங்கத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட அரசாங்க வழக்கில் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர் சார்பாக வழக்குரைத்தார். இது ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சட்டவல்லமையின் அங்கீகாரம் என்பதை விட அரசியல் சமரச நாடகமொன்றின் ஒரு பகுதி என்பதே உண்மை.

அடுத்த தேர்தலை வெல்வதற்கு அவசியமான காய் நகர்த்தல்கள் அனைத்தையும் அமிர்தலிங்கம் மேற்கொண்டார். வீரமாகாளியம்மன் கோவில் வாளில் செய்த சத்தியம் இந்த அரசியல் சதுரங்கத்தில் ஒரு மலிவான காய் நகர்த்தல்தான். சங்கிலியனின் வாள் என்று அமிர்தலிங்கத்தின் அடியாட்களால் அடையாளங் கூறப்பட்ட வாள் கோவில் மானம்பு விழாவில் வாழை மரம் வெட்டுகிற வாள் என்று பிறரால் கேலி செய்யப்பட்டதற்கான காரணமே இந்தச் சில்லரைத்தனமான பிரசார முறைதான்.

பின் விளைவுகளைப் பற்றி அக்கறை இல்லாமல் எடுத்த முடிவுகளால் தமிழரசுக்கட்சித் தலைமை தேசிய இனப்பிரச்சினை மேலும் மோசமாக உதவியதோடு தமிழ் மக்கள் பல இன்னல்கட்கு உள்ளாகவும் காரணமாகியது. ஆயினும் 1970க்குப் பின்பு எடுக்கப்பட்ட தவறான முடிவுகளில் அமிர்தலிங்கமும் அவரைச் சூழ இருந்த ஒரு சிறு குழுவும் கட்சியில் தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்தையும் நாம் அடையாளம் காணலாம். 1977ல் வரவிருந்த தேர்தலை மனதிற் கொண்டே செய்த காரியங்களில் அகோரமான பின்விளைவுகள் பற்றி இவர்கள் கற்பனை செய்தும் இருக்க மாட்டார்கள்.

மொழிப் பிரச்சனையின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழரது பெருவாரியான ஆதரவைத் தமிழரசுக் கட்சி பெற்றாலும், மட்டக்களப்புப் பிரதேசவாத அரசியலை ஒதுக்க முடியாதவாறு கட்சியின் தலைமையில் யாழ்ப்பாணத்து மேட்டுக்



குடிகளின் ஆதிக்கம் பற்றிய சந்தேகங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாகவே இருந்தன. 1970ம் ஆண்டின் பின்பு தமிழரசு கட்சி கண்ட சரிவு, மட்டக்களப்பு மாவட்டத்தில் அதன் எதிர்காலம் பற்றிய கவலைகளை அதிகப் படுத்தியது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்ற ஒரே ஒரு தமிழரசுக் கட்சிப் பிரமுகரான ராஜ துரைக்கு 1961ம் ஆண்டுக்குப் பிறகு தமிழரசுக் கட்சியின் அரசியலில் ஈடுபாடு குறைந்து விட்டது. அமிர்தலிங்கத்துடனான அவரது முறிவும் கட்சியில் அமிர்தலிங்கத்தின் எழுச்சியும் ராஜதுரையைக் கட்சியிலிருந்து விரட்ட வில்லை என்பதற்கு ராஜதுரை இல்லாமல் தமிழரசுக் கட்சியால் மட்டக்களப்பில் வெல்ல இயலாது என்ற அச்சமும் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகித் தன்னால் வெல்ல முடியாது என்ற ராஜதுரையின் அச்சமுமே முக்கிய காரணங்கள் எனலாம். செல்வநாயகம் ராஜதுரையின் அக்கறையீனத்தையும் அரசியற் சீரழிவையும் ஓரளவு அனுதாபத்துடன் சகித்துக் கொண்டது போல அமிர்தலிங்கத்தால் அவர் விரும்பினாலும் செய்திருக்க முடியாது. 1976ல் தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி என்று உருமாறிய பிறகு அந்த ஐக்கியத்தைக் குலைக்கும் விதமாக ராஜதுரையை வெளியேறச் செய்வதற்கு அமிர்தலிங்கத்துக்கு வாய்ப்பு இருக்கவில்லை. ஆனாலும் செல்வநாயகத்தின் மரணத்தின் பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணி என்று உருமாறிய பிறகு, அந்த ஐக்கியத்தைக் குலைக்கும் விதமாக ராஜதுரையை வெளியேறச் செய்வதற்கு அமிர்தலிங்கத்துக்கு வாய்ப்பு இருக்கவில்லை. ஆனாலும் செல்வநாயகத்தின் மரணத்தின் பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையைத் தனதாக்கிக் கொண்ட அமிர்தலிங்கம் ராஜதுரையைப் பழி வாங்க வேறொரு வழியைத் தேடினார்.

9ம் பக்கம் பார்க்க

## பகிஷ்கரிப்பின் அரசியல் - 2

# அரசியற் பிரகடனமாகப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை

பாராளுமன்றத் தேர்தலில் ஒருவர் வாக்களிக்கும் போது, வரையறைக்குட்பட்ட தெரிவுகளே அவருக்கு அனுமதிக்கப்படுகின்றன. பெரும்பாலும் ஒரு சில அரசியற் கட்சிகளில் ஏதாவது ஒன்றுக்கு வாக்களிக்கும் நிலையிலேயே மக்கள் உள்ளனர். அதிலும் ஒரு குறிப்பிட்ட அரசியற் கட்சியை அதிகாரத்திலிருந்து நீக்குவதா தொடர விடுவதா என்பது போன்ற தெரிவு மக்களின் முன் வைக்கப்படும்போது யாருக்கு வாக்களித்தால் தோற்றகடிக்க முடியும் என்ற அடிப்படையிலேயே எதிரணியினருக்கான வாக்குக்கள் விழுகின்றன. இதனால், இரண்டு மோசமான வலிய கட்சிகளில் ஒன்றுக்கு வாக்களிக்கும் நிலையை நாம் பல முறை கண்டுள்ளோம். இலங்கையின் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் 1956க்குப் பின்பு ஓரங்கட்டப்பட்டதற்கு இவ்வாறான சிந்தனைப் போக்கும் ஒரு காரணமாகும்.

வாக்காளர் மத்தியில் தேர்தலில் வெல்ல வாய்ப்பு இல்லாத ஒருவருக்கு வாக்களிப்பது தமது வாக்கை வீணாக்குவது என்ற மயக்கம் இருக்கிறது. இது ஓரளவுக்குத் திட்டமிட்டு வளர்க்கப்படுவதும் உண்மை. எனவே சரியானதும் உடன்பாடானதுமாகக் காணப்பட்ட கட்சியைத் தவிர்த்து பெரிய எதிரியை முறியடிக்கக் கூடிய வலிய எதிரியை ஆதரிக்கும் போக்கு கடந்த பல தசாப்தங்களாக நீடித்துள்ளது. இவ்வாறு வாக்களித்த பின்பு மனம் வருந்தினாலும் பலர் அதே விதமான சபலத்துக்கு மீண்டும் மீண்டும் ஆளாவதை நாம் காணலாம். வெல்லக்கூடியவர் யார் அல்லது வெல்லக்கூடாத ஒருவரை வலிமையுடன் எதிர்க்க கூடியவர் யார் என்ற அடிப்படையிலான தேடல் முதலாளியக் கட்சிகளின் ஆட்சி தொடர்வதற்கு வசதியாகவே இருந்து வந்துள்ளது. இது, தேர்தல் மட்டுமே அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பதற்கான பாதை என்ற கருத்தின் அடிப்படையிலானது மட்டுமல்ல. இதில் தேர்தலில் அரசியல் தவிர்ந்த பல்வேறு சமூகப் பரிமாணங்களும் உள்ளன. தேர்தல் என்பது ஒரு போட்டியாக, அதுவும் அதிகாரத்தைப் பிடிப்பதற்கான போட்டியாக, அடையாளம் காணப்படும் போது, வெல்லக் கூடிய தரப்புடன் சேர்ந்து நிற்பது அப் போட்டியில் தங்களையும் பெரிய பங்காளிகளாக்கும் ஒரு மன மயக்கத்தை அளிக்கிறது. விளையாட்டுப் போட்டிகள், சினிமா நடிக நடிகையர் பற்றிய விருப்பு வெறுப்புக்கள் போன்று தம் சமூக வாழ்வுடன் உறவற்ற விடயங்களிலே கூடச் செயற்படுகிற இந்த மனோபாவம் அரசியல் அதிகாரத்திலிருந்து அந்நியப்பட்டு மாற்று அரசியலுக்குப் பழக்கப்படாத மக்கள் நடுவே வலுப்படுகிறது.

பாராளுமன்றத்தின் மூலம் சமுதாயத்தை மாற்றவோ, மக்களுடைய அடிப்படையான தேவைகளை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கை தளர்வு பெறத் தொடங்கியவுடன் மக்கள் பாராளுமன்ற அரசியலிலிருந்து ஒதுங்கத் தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. தங்களால் ஒரு அரசாங்கத்தை மாற்றவோ மீண்டும் பதவியிலிலிருத்தவோ தங்களுக்கு உள்ள அதிகாரத்தை மக்கள் பயன்படுத்த விரும்புவதாலே தேர்தலில் பங்குபற்றுகின்றனர் என்பது மட்டுமன்றி, தேர்தல் முடிவுகள் மோசடிகள் மூலம் அதிகார வர்க்கத்திற்குச் சாதகமான முறையில் மாற்றப்படலாம் என்று பரவலாக அறியப்பட்ட நிலைமைகளிலுங்கூட மக்கள் தேர்தலில் வாக்களிக்கின்றனர். இது ஒரு வகையில் தங்களுக்குள் ஒரு வகையான அரசியல் அதிகாரத்தை, அது எவ்வளவு போலியானதாயினும், பிரயோகிக்க வேண்டும் என்ற உணர்வின் வெளிப்பாடு எனலாம். மக்களிடம் உண்மையான அரசியல் அதிகாரம் வராத போது அதிகாரத்தின் மாய நிழல்களிடம் ஒரு மயக்கம் ஏற்படுகிறது. இந்த மயக்கமே முதலாளிய ஜனநாயகத்தின் அடிப்படை.

**முதலாளிய ஜனநாயகம் என்கிற மாயையை மக்கள் அடையாளம் காணும் போது தான் உண்மையான, உழைக்கும் மக்களின் ஜனநாயகம் உருவாக வழி ஏற்படுகிறது. இந்தச் சிந்தனை மாற்றம் தானாக ஏற்படுவதில்லை. பாராளுமன்ற அரசியல் பற்றிய விரக்தி முதலாளிய ஜனநாயகத்தின் மீதான விரக்தியாக மாறி அதன் மூலம் ராணுவ சர்வாதிகாரமும் ஃப்பாஸிஸமும் அதிகாரத்தைப் பிடித்துள்ளதற்கு வரலாற்றில் நிறைய உதாரணங்கள் உள்ளன.**

ஏதெனில் முதலாளிய ஜனநாயக அரசியலின் பங்குபற்றுவதன் மூலம் மாக்ஸிய-லெனினிய வாதிகள் மாற்று வழிகள் பற்றிய சிந்தனையை மக்கள் மத்தியிற் கிழறி விடுகின்றனர். பாராளுமன்றத் தேர்தலில் பங்கு பற்றுவதன் மூலம் மக்கள் தமது எதிர்ப்புணர்வை இரண்டு முதலாளியக் கட்சிகட்கிடையிலான தெரிவாக மட்டுமே புலப்படுத்த அவசியமில்லை. மக்கள் முன்னுள்ள மாற்றுவழிகள் பல அவற்றைத் திட்டமிட்ட முறையில் செயற்படுத்தி மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டுவதுடன் அவர்களது அரசியல் உணர்வை மேலும் கூர்மைப்படுத்தவும் முடியும்.

தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது முதலாளிய ஜனநாயகம் என்கிற அரசியல் மோசடிக்கும் ஜனநாயகத் திரிப்புக்கும் எதிரான ஜனநாயகப் போராட்டத்தின் அதியுயர்ந்த தந்திரோபாயங்களுள் ஒன்று. அதை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்கு மக்கள் மத்தியில் கணிசமான அளவு அரசியல் வேலை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒரு வலிமையான முற்போக்கான, ஜனநாயக வெகுஜன இயக்கமோ புரட்சிகர அரசியற் கட்சியோ இல்லாமல் தேர்தல் பகிஷ்கரிப்பு பயனளிக்க மாட்டாது.

தேர்தல் பகிஷ்கரிப்பு என்ற கட்டத்தை அணுகுவதற்கு முன்னர் செய்யக் கூடிய அரசிற் பணிகளும் நம்முன் உள்ளன. இவற்றின் வெற்றி, தேர்தலில் வாக்களித்தல் என்பது எவரையாவது ஒரு பதவியில் அமர்த்துவது பற்றியதோ எந்த ஒரு அரசியற் கட்சியையோ பாராளுமன்ற அதிகாரத்தில் அமர்த்துவது பற்றியதோ மட்டுமல்ல. வாக்களித்தல் என்பது ஒரு அரசியற் கூற்றுமாகும். எவருக்கும் வாக்களிப்பதும் மட்டுமன்றி எவருக்குமே வாக்களிக்கமாமல் விடுவதும் தேர்தலில் பங்கு பற்றாமற் போவதும் வாக்குச் சீட்டைப் பழுது செய்வதும் கூட அரசியற் கூற்றுக்கள்தான். உணர்வு பூர்வமாகப் பழுதாங்கப்பட்ட வாக்குச் சீட்டு தெளிவில்லாமல் வழங்கப்பட்ட வாக்குச் சீட்டை விட வலிய ஒரு அரசியற் பிரகடனமாகலாம். தேர்தலில் வாக்களிக்கத் தவறுவதற்கும் திட்டமிட்டே வாக்களிக்காமல் ஒதுங்குவதற்கும் இடையே எது வித ஒற்றுமையும் இல்லை. முன்னையது மௌனம் மற்றது அரசியல் முழக்கம். ஒரு அரசியற் கூற்று என்ற வகையில் வாக்குச் சீட்டை எவ்வாறு பயன்படுத்துவது என்பது எழுந்தமான முறையில் செயற்படுத்த முடியாதது மக்களை அரசியற்படுத்துவதும் வெகுசன அரசியலில் ஈடுபடுத்துவதும் அதனுடன் தொடர்பானவை. அதன் மூலமே தேர்தல் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்காத விதமாக அளிக்கப்படும் வாக்குக்கள் வீணாகின்றன என்ற சிந்தனைப் போக்கை முறியடிக்க முடியும். பகிஷ்கரிப்பு அரசியலை நோக்கிய நகர்வுக்கு .இச் சிந்தனை மாற்றம் மிகவும் பயனுள்ளது.

அடுத்துப் பகிஷ்கரிப்பு மூலம் சாதிக்கக் கூடியது என்ன என்று கவனிப்போம்.

ஸ

விற்பனையாகிறது.

தந்தையும் மைந்தரும்

தமிழரசுக் கட்சி அரசியலின் விமர்சனம்

இமயவரம்பன்

விநியோகம்
வசந்தம் பிறைவேட் லிமிட்டட்
44, 3வது மாடி,
கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி,
கொழும்பு - 11.

நன்றி - நூலகத்திட்டம்



# விடுதலை இல்லாமல் மற்றவை எல்லாம் அசாத்தியம்தான்

பெண்களுக்குச் சார்பாக என் உணர்வுகளை என்னாற் போதுமான நிறைவுடன் சொல்ல இயலாது. என் சிந்தனையிலும் வாழ்க்கையிலும் அவர்களுடைய நண்பனாக இருக்க முயன்றேன். உங்களிடமிருந்து கிடைத்த கடிதங்கள் எனக்குப் பெறுமதி மிக்கவை, முக்கியமானவை. இன்றைய நிலையில் நான் தரக்கூடியது என் மனமார்ந்த வாழ்த்துக்கள் தான். பெண்கள் பட்டுள்ள வேதனைகள் எல்லாவற்றுக்காகவும் அவர்கள் வாழ்க்கையில் மிகச்சிறந்தனவற்றையே பெறத் தகுதியுடையவர்கள்.

விடுதலைக்கான என் போராட்டம் அவர்களுடைய ஏக்கங்களுக்கான ஒரு பதிலாகும். அவர்களுடைய ஆவல்கட்கு ஒரு தீர்வுக்காக நான் முயல்கிறேன். பெண்களுக்கு நான் சொல்வது இதுவே : பெண்கள் தமது தாழ்ந்த நிலையிலிருந்து மீள வேண்டும். பெண்விடுதலை பற்றிய எனது தத்துவார்த்த அனுகுமுறை எப்போதும் இதுவாகவே இருந்துள்ளது. இன்னும் அந்தக் கருத்தையே ஆதரிக்கிறேன்.

மனிதர் என்ற வகையில் பெண்கள் மிகத் தீவிரமாகவும் மிகக் கொடுமையாகவும் சுரண்டப்பட்டு ஒரு உடைமை என்ற நிலைக்குக் கீழிறக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் உணர்வுகளுக்கு அடிமைகளாகியுள்ளனர். பணத்துக்கு ஈடான மட்டத்துக்கு அவர்கள் கீழிறக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்கும் பண்டங்களுக்கும் இடையில் வலிய தொடர்புகள் உள்ளன. பெண்களுக்கும் பணத்துக்கும் இடையில் வலிய தொடர்புகள் உள்ளன. என்றாலும் அதையெல்லாம் விட வலிய உறவு பெண்களுக்கும் அமைதிக்கும் இடையில் உள்ளது, பெண்களுக்கும் விடுதலைக்கும் இடையில் உள்ளது.

வணிகமும் அரசும் பற்றிய விவகாரங்கள் ஆண்களின் அலுவல்களாக இருந்துவந்துள்ளன. இந்த நிலைமை பெண்களைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி ஆண்களுக்கு நன்மை செய்துள்ளது. இவ் விடயம் மிக ஆழமானதும் விளங்கிக்கொள்ள வேண்டியதும் ஆகும். விடுதலையை வேண்டுவதில் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறீர்கள் ?

உங்களிடம் எவ்வளவு வலிமை உள்ளது ? உங்களுக்கு விடுதலை வேண்டுமா ?

எங்கள் இளம் பெண்கள் எத்தனையோ பேர் தம்மையே எரித்து மரித்துள்ளனர். அவ்வாறு செய்தோருக்காக நான் மிகவும் வருந்துகிறேன். அச் செயல்கள் யாவும் விடுதலையுடன் தொடர்புடையவை உயர்ந்ததொரு விடுதலைக்கான அவர்களுடைய தேடலின் விளைவுகள் அவை. விடுதலை மதிப்புக்குரியது என நம்புகிறேன்.


## பெண்கள் தங்களை மாற்றியமைக்க வேண்டும்

எனினும் விடுதலைக்குப் போதிய கவனம் செலுத்தப் படுவதில்லை. அது அதிகாரம் பற்றிய ஒரு பிரச்சனை. இப்போதுள்ள நடைமுறையைத் தொடரவிடுவது தனிமைப்பட்டுப் போவதாகும். விடுதலை என்பது மனதினதும் ஆத்மாவினதும் ஊட்டப்பொருளாகும். மனிதர் மனிதராக இருப்பது விடுதலையினாலேயே ஆயினும் அதன் விலை பெரியது.

பெண்களுடன் நான் நிறுவியுள்ள நட்பு ஒரு நல்ல மட்டத்திலும் நல்ல உறவிலும் அமைந்தது. நல்லதொரு கருத்துப் பரிமாறல் நிறுவப்பட்டது ஆயினும் அது செய்து முடிக்கப்படவில்லை. அறிவுத்திறனுடையவர்களால் அந்த உறவைத் தொடர முடியும். அவர்களுக்கு நான் சொல்வது விளங்கும்.

பால்நிலை என்பது அருவருப்பானதாக்கப்பட்டுள்ளது. பெண்களைப் பொறுத்தவரை அது ஆன்மீக வதையாகியுள்ளது.

பாலுணர்வின் அடிப்படையில் மட்டுமே அதை நோக்குவது மிக அசிங்கமானதும் தவறானதும் ஆகும். நாங்கள் அதற்கு எதிராகப் போராடி அதை வெல்ல முயன்றோம். மரபு வழியிலான திருமணம் குடும்ப உறவுகள் ஆகியன பற்றிக் கவி



குர்திய மக்கள் கட்சியின் தலைவர் அப்துல்லா ஓச்சலான் துருக்கிய சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறார். அவரது விடுதலை வேண்டி ஐரோப்பா முழுவதும் குர்திய மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்கள் செய்து வருகின்றனர். பத்துக்கு மேற்பட்ட பெண்கள் தமக்குத்தாமே தீமூட்டி தற்கொலை செய்து தமது எதிர்ப்பைக் காட்டினர். சிறையில் இருந்து ஓச்சலான் குர்திய துருக்கிய பெண்கள் அனைவருக்கும் அனுப்பிய செய்தியே இதுவாகும்.

த்தோம் அது அடிய? ல்லாத ஆழக் கிணறு போன்றது. அதைத் தீர்க்காமல் பிரச்சனையை வெற்றிகான முடியாது.

ரொட்டிக்கும் நீருக்கும் மேலாக விடுதலைக்கான தேவை இருக்கிறது. ஆண்கள் இல்லாமற் பெண்களோ பெண்கள் இல்லாமல் ஆண்களோ இருக்க முடியாது. ஆனால் என் அபிப்பிராயத்தில் அது முடியும். பெண்கள் தம்மை உச்சிமுதல் உள்ளங்கால் வரை புதிதாக அமைக்க வேண்டும். நான் உடல் தொடர்பான மாற்றத்தைச் சொல்லவில்லை. அந்த நிலையில் ஆண்களும் பெண்களும் இருப்பது கொலைக்கு ஒப்பானது. கௌரவம் பற்றியும் பால்நிலை பற்றியும் கவனிப்போமானால், “அவளை வேறு எவரும் அடைய விடமாட்டேன்'' ''எவனாவது அவள் மேல் கண் வைத்தால் அவனைக் கொன்று விடுவேன்”, “அவள் என்னுடையவள்”, ''என் கௌரவம்'' போன்ற மனோபாவங்களைக் காணலாம்.

பெண்கள் தம்மை உடையவர்களாக இருந்ததில்லை. பெண்கள் தாமே தம்மை உடையவர்களாக்கத் தொடங்க வேண்டும். இதைச் செய்யப் பெண்கள் பெண்மையை வென்றாக வேண்டும். பெண்கள் ஆண்களுக் கெதிராகப் போர்தொடுக்க வேண்டும். இதற்கு, அவர்கள் விழிப்புடனும் புத்திசாதுரியத்துடனும் கவனத்துடனும் இருந்து பெரியதொரு போராட்டம் நடத்த வேண்டும். இது முற்றிலும் ஜனநாய கமான போராட்டமாகும். இது சிந்தனையின் தொழிற்பாடு. விடுதலைக்கு அதன் அமைதிப் போராளிகளும் தேவை.

ஆனாலும் பெண்கள் வல்லமைக்கு எதிராகப் போராடவும் தங்கள் விலிமையின்மையை வெல்லவும் வேண்டும். இந்தப் பலவீனங்களால் அவர்களால் இந்த நிலைமையை மீற இயலாதுள்ளது. இளம் பெண்கள் இதை உணர்ந்தாலும் அவர்கள் தங்கள் வலிமையின்மையைத் துறக்க ஆயத்தமாக இல்லை. எவ்வாறாயினும், கணவனையும் குழந்தைகளையும் விடச் சிறந்ததும் பெறுமதியானதும் முக்கியமானதுமாக விடுதலைகாணப்பட வேண்டும். விடுதலை இல்லாமல் மற்றவை எல்லாமே அசாத்தியம் தான். கௌரவம் என்றால் என்ன என்று சரியாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். விடுதலையே கௌரவித்தின் உண்மையான ஊற்றுக்கண். என்னளவில் கௌரவத்தின் பொருள் விடுதலையாகும்.

இதை வெல்ல மனஉறுதியும் வலிமையும் தேவை. சனநாயக வேலை இந்த இடத்திலிருந்து தொடங்கலாம். அதற்கான வேலையும் போராட்டமும் அரசியற் கட்சிகட்குள்ளும் அவற்றையொத்த களங்களிலும் நடத்தப்படலாம். ஒரு சனநாயக யுத்தம் தொடக்கப்பட வேண்டும். முதலிற் பெண்கள் தம்மையே அறிய வேண்டும்.

பெண்களுக்காகச் செய்யப்படக் கூடிய பல உள்ளன. தங்களுடைய பிரச்சனைகட்கு மட்டுமன்றி வேறும் பிரச்சனைகட்கும் தீர்வும் விடைகளும் தரும் வலிமை பெண்களுக்கு வேண்டும். எத்தனையோ பெண் களுக்குப் பயிற்சி தரப்பட்டது. இப் பெண்களிடையிலிருந்து ஒரு துரோகமும் நிகழவில்லை. தாய்மாரும் பெண்களும் அதிகமாக வேண்டுவது அமைதியையே. உண்மையில், போர் என்பது முதலிற் பெண்களுக்கு எதிராகவே விருத்தியானதும் ஆண்களின் காரியமும் ஆகும். பெண்கள் சமூகப் பிறவிகளும் அமைதியானோரும் ஆவர். பெண்களின் இயல்பு போரையும் வர்க்கங்களையும் ஏற்க மறுக்கிறது. இயல்பாகவே அவர்களிடம் ஒரு சோஷலிசப் பன்பு உள்ளது. அவர்கள் ஆண்களிலும் விட சோஷலிஸச் சார்பானோரும் வாழ்வுக்குச் சார்பானோரும் ஆவர். வாழ் க்கையுடன் ஆண்களின் உறவு வன் முறை சார்ந் தது. இவ் விடயம் ஆண் மேலாதிக்க த்துடன் உறவுடையது.

அமைதிக் காலத்தில் செழிப்பவர்கள் பெண்கள். போரை மேலும் வளர்போர் ஆண்களே. அமைதிக்கான போராட்ட முனைப்பு தொடர்ச்சியாக நிலைநிறுத்தப்பட வேண்டும். அமைதிக்கான இயக்கத்திற் போராட்டத் தன்மையுடன் பெண்கள் பங்குபற்றுவது முக்கியமானது. இந்த இயக்கங்கட்குத்தலைமை தாங்குவதாயின் அமைதிக்கும் சனநாயகதுக்குமான இயக்கங்கள் பற்றிக் கவனங்காட்ட வேண்டும். அமைதிக்கும் சனநாயகத்துக்கும் தலைமை தாங்குவோர் ஒரு போராளிப் பண்பையும் உருவாக்கிக் கொள்வர்.




பெண்களுடைய இலக்குக்கள் தெளிவாகக் காணப்படின் அவர்கள் செயல்முறையையும் கண்டறிவார்கள். விடுதலை மீதான நேசம் வலியதாக இருந்தால், அவர்களால் பாதையையும் செயல்முறையையும் வழிவகைகளையும் காண இயலும். உதட்டளவில் மட்டுமே விடுதலையை அணுக முடியாது. சிந்தனைகளை உடையோர் ஆண்களே என எண்ணும் பெண்கள் சபிக்கப்பட்டோர் ஆவர். எவராவது “நாம் எப்படி இதைச் செய்யலாம் ? அவர்கள் விட மாட்டார்கள்.” என்ற விதமாகச் சொன்னால் எனக்கு மெய்யாகவே கோபம் வரும். “எனக்கு வழியைத் திறந்து விடுங்கள்” என்று கேட்போரையும் வெறுக்கிறேன். இப்படிச் சொல்வதால் அவர்கள் ஆண்களிடம் உதவி வேண்டி நிற்கின்றனர்.

இப்படிப்பட்ட பெண்களே கணவர்களிடம் தஞ்சம் வேண்டி நிற்பவர்களாவர். மற்ற எவரிடமும் உதவி கேட்க ஒரு தேவையும் இல்லை. பெண் முதலில் இமயத்தில் ஏறித் தன் மூளையையும் இதயத்தையும் வளர்த்தெடுக்க வேண்டும்.

மிகப்பெரிய நேசம் தளையற்ற தோழமையே. மூளையும் இதயமும் இயங்கினாலும் உங்களுக்குத் தோழர்கள் தேவை. குழந்தைகள் அழுவார்கள். பெண்கள் குழந்தைகள் போல அழலாகாது. நீங்கள் உங்களை அறிவின் துணையுடன் வளர்த்தெடுக்க வேண்டும். “அரசோ என் அப்பாவோ என் கணவனோ எனக்கு ஏதாவது தரவேண்டும்” என்று சொல்கிறவர்கள் தான் உண்மையாக நம்பிக்கை இழந்தோராவர். மெய்யாகவே விடுதலையை வேண்டுகிறவர்கள் தங்களைத் தாங்களே விருத்தி செய்து கொள்கின்றனர். அவர்கள் தேவையான எல்லாவற்றையும் செய்வார்கள். அவர்களுடைய வல்லமை வரையறைப்பட்ட தென்றால், தங்கள் ஆற்றலுக்கு ஏற்பவும் அதற்கு உட்பட்டும் அவர்கள் செயற்படுவார்கள். அவர்கள் தம்மாலான எதையும் செய்வார்கள்.

## பெண்விடுதலை பற்றி குர்திய மா-லெ கட்சித் தலைவர்

''குர்திய நேசம்'' என்ற தலைப்புடைய எனது நூலில் நான் எழுதியதெல்லாம் விடுதலையைப் பற்றியதே. தாராளவாதச் சுதந்திரம் பற்றிய சிந்தனைகள் விருத்தி பெறுகின்றன துருக்கியில் இது பற்றி இப்போது பேசப்படுகிறது. இதுபற்றிய நல்ல கட்டுரைகளைப் பத்திரிகைகளில் வாசித்திருக்கிறேன். பெண்கள் அமைதிக்கான பங்கை வசிக்க முடியும். அது மானுடத்துக் கான போராட்டம். நாம் மானுடத்துக்கான போர் தொடுத்துள்ளோம். அது பெண்களுக்கு அதிகம் முக்கியமானது. இதுவே பிரச்சனையின் மையம். ஏனென்றால் பெண்கள் ஒடுக்கப்பட்ட தேசங்களுடனும் மக்களுடனும் ஐக்கியப் பட்டுள்ளார்கள்.

பெண்கள் நல்ல மனிதப் பிறவிகள். பெண்களுடன் தோழராக இருப்பது நல்லது. பெண்கள் சிந்தனையில் ஆண்களுக்கு இளைத்தவர்களல்ல. சம்பிரதாயமான ஆணாக என்னை மாற்ற ஒரு பெண்ணுக்கும் இயலாதது. ஒரு நல்ல காதலனாகவோ கணவனாகவோ என்னை மாற்றச் சிலர் முயன்றுள்ளனர். அதை நான் ஏற்கவில்லை. வெறுக்கிறேன். என்னால் ஒரு அடிமைப் பெண்ணுடன் உறவு பூண முடியாது. இது என்னுடைய தனிப்பட்ட பண்புகளில் முக்கியமானது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பழைய உறவுமுறையை உடைத்தவன் நான் நயவஞ்சகமான எல்லா நடத்தைகளையும் நிராகரித்து விட்டேன். பெண்களுக்குத் தளையற்ற சுதந்திரத்தை உருவாக்க முயன்றிருக்கிறேன். அதை மேலும் வளர்தெடுக்க முடியும். நான் கொள்கை அடிப்படையிலேயே பெண்களுடன் நட்புப் பூண்டிரு க்கிறேன். ஆண்கள் ஆபத்தா னவர்ளாக இரட்டைவேடம் பூண்வோர்களாக ஏமாற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். பெண்கள் பெண்மைக்குள் தள்ளப்படுகின்றனர்.

தங்களை எரித்து மரணத்துட்புக எண்ணியவர்கள், அப்படிச் செய்து தங்களை விடுதலை செய்விக்கலாம் என்று நினைத்தார்கள். அவர்கள் விடுதலையை வென்றுள்ளனர். அவர்கள் தங்கள் நிலைப்பாட்டைச் சொன்ன விதம் அது அவர்கள் தங்களை எரித்துச் சாகடிப்பதை நான் விரும்ப வில்லை. அப்படிச் செய்கிறவர்கள் பொறுமையும் வல்லமையும் அற்றவர்கள். பெண்கள் அமைதிக்கும் சனநாயத்துக்குமான போராளிகளாக வேண்டும். முன்னுதாரணமானவர்களாக வேண்டும் அவர்கள் இதைத் தான் விளங்கிக்கொள்ள வேண்டும். தங்களையே எரித்துக் கொள்வதற்குப் பதிலாகத் தங்கள் நிலைப்பாட்டைச் சொல்லுகிறதற்கு ஏற்ற மாற்றுவழி அதுவாகும். பத்துக் கணக்கானோர் தம்மைத் தீ மூட்டிச் சாகடித்துள்ளனர். இது பெரியதொரு விடயம். அதன் இலக்கு பெரிய பெறுமதிவாய்ந்த பிறவியாக மாறுவதாக இருக்க வேண்டும். அமைதியையும் சனநாயகத்தையும் வென்றெடுப்பதன் மூலமே தங்களை எரித்துச் சாவைத் தழுவினோருக்கு மதிப்பம் மரியாதையும் காட்ட முடியும்.

நான் கீழான வாழ்வு வாழ மாட்டேன். அப்படி வாழ்வது இழிவானது. நான் எந்த வகையான மரணத்துக்கும் ஆயத்தமாயுள்ளேன் என்பதை மலினமானதாகக் கருதுகிறேன். அமைதிக்காக எதாவது செய்ய வேண்டும் என்ற தேவை இருந்தது. அமைதிக்காக வாழ்வது எனக்குப் பொருத்தமானதாக இருந்தது. நான் அமைதியும் சகோதரத்துவமும் பற்றிப் பேசினேன். இது சரணாகதி அல்ல. எனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றப்பட்டாலும் நான் என்னைத் துருக்கியரின் எதிரி என்று சொல்ல மாட்டேன். நான் மக்களுக்காகப் போராடுகிறேனே ஒழிய அப்படிப்பட்ட அணுகுமுறைக்காக இல்லை.

வாழ்வதும் வாழவிடுவதும் கொல்வதையும் கொல்லப்படுவதையும் விடச் சரியானது. இந்த விளக்கத்துக்கு மீளுங்கள். நான் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை. ஒரு குறைபாடு இருந்தது. அது மாற்றப்பட்டு விட்டது. நான் சாகவோ வாழவோ தயார். நான் வாழவோ சாகவோ தயார்.

தேவையானால் நான் சாவேன். சாவு வருமாயின் புன்முறுவலுடன் அதை நோக்கி நடப்பேன். அதற்கு மேல் அவர்கள் எதைக் கேட்க முடியும் ? பெரிய விழுமியங்களை அணுக இதுவே வழி.

நமது கோரிக்கை முழு மானிடத்துடனும் அமைதியாக வாழுவது. என்னுடைய குறை குற்றங்கள் மிஞ்சி இருக்கும் என அஞ்சுகிறேன். இந்தச் சுவர்கள் நடுவே அவற்றைக் கொஞ்சம் வென்றுள்ளேன்.

பெண்களுக்கு என் மரியாதையைச் செலுத்துகிறேன். அவர்கள் என்னோடு இருக்க விரும்பும் அளவுக்கு நான் அவர்களோடு இருக்கிறேன். நேசம், நட்பு தோழமை ஆகியவற்றுடனேயே மானுடம் இருக்கும்.

❖❖❖

நன்றி - நூலகத்திட்டம்



# நான் காணும் கனவு

### மாட்டின் லூதர் கிங்



இந்நாட்டின் வரலாற்றில் இடம்பெறப்போகும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திரத்திற்கான பேரணியில் நான் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். அடிமைத் தளை நீக்கும் பிரகடனத்தில் நூறுவருடங்களுக்கு முன் கைகொப்பமிட்ட அமெரிக்கப் பெருமகனாரின் நிழலில் நான் இன்று கூடிநிற்கிறோம். நீண்ட அடிமை வாழ்வில் உழன்று கொண்டும் அநீதிக் கனவில் தவித்துக் கொண்டிருந்த பல்லாயிரக் கணக்கான கறுப்பின அடிமைகளுக்கு இப் பிரகடனம் பெரும் ஒளிவிளக்காய் விளங்கியது. நீண்டகால அடிமைவாழ்வுக்கு விடிவாக இது வந்தது.

நூறு ஆண்டுகளுக்கு பிறகும் கறுப்பின மக்கள் விடுதலை அடையவில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பின்னும் கறுப்பின மக்கள் நிற ஒதுக்கலுக்கும், இன பேதத்திற்கும் உள்ளாகி சோகமயமாக முடங்கி இருக்கின்றனர். நூறு வருடங்களுக்குப் பிறகும் செல்வச் செழிப்பு நிறைந்ததொரு சமுத்திரத்தில் ஊசலாடும் தனித்தொரு வறுமை நிறைந்த தீவாக வாடிக் கொண்டிருக்கின்றனர். கறுப்பின மக்கள் நூறு ஆண்டுகள் கழிந்த பிறகும் அமெரிக்க சமூகத்தில் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக ஒதுங்கி வாழ்கின்றனர். ஆகவேதான் நான் இங்கு எமது அவல நிலையை மேடையில் எடுத்துக் காட்ட கூடியுள்ளோம்.

ஒரு விதத்தில் நாங்கள் தலைநகருக்குக் காசோலை ஒன்றைக் காசாக்கக் கூடியுள்ளோம். எங்கள் குடியரசின் சிற்பிகள் அரசியல் யாப்பையும் சுதந்திரப் பிரகடனத்தையும் எழுதினார்கள். அவர்கள் வகுத்து வைத்த உறுதிப் பத்திரம் அமெரிக்காவின் வாரிசுகள் அனைவரையும் செயல்படுத்த வேண்டிய பொறுப்பாளிகள் ஆக்குகிறது. இந்த உறுதிப் பத்திரத்தின் படி சகல வெள்ளை இனத்தவருக்கும் கறுப்பு இனத்தவருக்கும் வாழவும், சுதந்திரமாய் இருக்கவும் சந்தோஷத்துடன் இருக்கவும் ஆன உரிமைகள் உறுதி செய்யப் பட்டுள்ளது.

ஆனால் இன்றோ கறுப்பினத்தவரைப் பொறுத்த மட்டில் இன்று அமெரிக்கர்கள் உதாசீனம் செய்கின்றனர். அமெரிக்கா கறுப்பின மக்களுக்கு வழங்கிய காசோலை ''போதிய நிதி இல்லை'' என்ற குறிப்புடன் செல்லுபடி அற்றதாகி எம்மிடம் திரும்பி விட்டது. நீதி வங்கி நிதி அற்று முறிந்து போய்விட்டது. என்பதை எம்மால் நம்ப முடியவில்லை. இத்தேசத்தின் நிறைந்த வாய்ப்பு வங்கிகள் நிதியின்மையால் முறிந்து விட்டன என்பதனை எம்மால் நம்ப இயலவில்லை. ஆகவே தான் நாம் வழங்கப்பட்ட காசோலையைக் காசாக்க வந்துள்ளோம். இந்தக் காசோலை மூலம் எமக்குச் சுதந்திரமும் சட்டப்படியான பாதுகாப்பும் தரும் காசைப் பெற வந்துள்ளோம். நாம் இந்தப் புனிதமான இடத்தில் கூடியது அமெரிக்கர் உடனடியாகச் செய்ய வேண்டியதை நினைவூட்டவேதான்.

பொறுத்துச் செயல் படுவோம் என்றிருக்கவோ உற்சாகத்தைத் தணிக்கும் மருத்துகளைப் பாவிக்கவோ இது உரிய தருணமல்ல. அளிக்கப்பட்ட ஜனநாயக வாக்குறுதியை செயல் படுத்தவேண்டிய நேரமிது. இன ஒதுக்கல் என்னும் படுபாதாள இருளிலிருந்து விடுபடும் இனச்சமத்துவ நீதி என்னும் ஒளியை நோக்கி நடைபோட வேண்டிய நேரமிது. இன ஒடுக்கலிலிருந்து விடுபட்டு சகோதரத்துவம் என்னும் வலிய பாதையொன்றை அடைய எமது தேசத்தை இட்டுச் செல்ல வேண்டும். கடவுளின் குழந்தைகள் அனைவருக்கும் நீதி கிடைக்கச் செய்யும் நேரமிது. இந்த அவசரத் தேவையை உதாசீனம் செய்தால் பேராபத்தாய் முடிவுறும். கறுப்பின மக்களின் நியாயபூர்வமான திருப்தியீனம் என்கின்ற கடும் கோடை வெம்மை சுதந்திரமும் சமத்துவமுமான குளிர் பருவகாலம் வந்தால் மட்டுமே தணிவடையும். 1963ம் ஆண்டு முற்று முடிவான ஆண் டல்ல வெறும் ஆரம்பமே.

கறுப்பினத்தவர் தமது வேதனையை வெளிப்படுத்துகின்றனர். நாம் நமது வழமையான வேலைகளைத் தொடர்வோம் என்று சிலர் நினைக்கிறார்கள். கறுப்பு இனத்தவர்களுக்கு குடிமக்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப் படும் மட்டும் அமெரிக்காவில் அமைதி நிலவாது நீதி முறையாக வழங்காதவரை தேசத்தின் அத்திவாரத்தையே கலவரம் தொடர்ந்து உலுப்பியபடியே இருக்கும்.

நீதி என்கின்ற அரண்மனையை நோக்கி நடைபோடும் எமது மக்களுக்கு நான் சொல்ல வேண்டியவை சிலவுண்டு. சரியான இலக்கை அடையும் முயற்சியில் தவறான செயல்களைப் புரிந்து குற்ற வாளிகளாகாதீர்கள். விடுதலைத் தாகத்தைத் தணித்துக் கொள்ள கசப்பையும் வெறுப்பையும் குடித்து விடாதீர்கள்.

நாம் எமது உரிமைப் போராட்டம் கட்டுப் பாடோடும் கௌரவத்தோடும் தொடர வேண்டும். எமது போராட்டம் வன்முறையாக மாறக் கூடாது. மீண்டும் மீண்டும் நாம் வன்முறைக்கு எதிராக கௌரவமான சாத்வீக முறைகளையே கையாள வேண்டும். கறுப்பு இன மக்களை சூழ்ந்துள்ள இராணுவ நடவடிக்கை வெள்ளை இன மக்கள் மீது வெறுப்பை வளர்த்து விடக் கூடாது. ஏனெனில் வெள்ளை இனத்தவர் பலர் எங்களோடு உள்ளனர். அவர்கள் தங்களது சுதந்திரத்தை எம்முடைய சுதந்திரத்தோடு பின்னப் பிணைந்துள்ளதெனக் கருதுகிறார்கள்.

நாம் தனியாக நடைபோடக் கூடாது. அப்படித்தான் நடந்து செல்லவேண்டி வந்தால் எல்லோருக்கும் முன்பாகச் செல்வதாக உறுதி பூண வேண்டும். நாம் திரும்ப இயலாது. சமூக நீதி வழங்கவுள்ளோர் எம்மிடம் கேள்வி கேட்கின்றனர். ''நீங்கள் திருப்தி அடைவது எப்போது ?'' கறுப்பு இனத்தவர் மீது பொலிசாரின் மிருகத்தனமான அடக்குமுறை செலுத்தப்பட்டு அவர்கள் சொல்ல ஒண்ணாத கொடுமைகளை அனுபவித்து வரும் வரை திருப்தி கொள் மாட்டார்கள். நகரத்திலுள்ள உணவு விடுதிகள், எண்ணெய்க் குதங்களோடு கூடிய தங்கு விடுதிகள், மற்றைய தங்கு விடுதிகள் ஆகியவற்றில் கறுப்பு இனத்தவர்க்கு அனுமதி மறுக்கப் பட்டு வரும்வரை போராட்டம் ஓயாது. கறுப்பு இனத்தவர் சிறு சிறு குடில்களில் வாழந்துவரும் நிலை மாறி பெரும் இல்லங்களில் வாழும் நிலை வர வேண்டும். ''வெள்ளையர்களுக்கு மட்டுமே'' என்பதன் கீழ் எங்கள் பிள்ளைகளின் தனித்துவம் பறிக்கப்பட்டு சுயகௌரவம் களவாடப்பட்டு இருக்கும் நிலை நீடிக்கும்வரை நாம் திருப்தி அடைய மாட்டோம். மிசிசிப்பியில் வாழ்கின்றப் நீக்குரோ இனத்தவருக்கு வாக்களிக்கும் உரிமையில்லை.

நியுயோக்கில் இருக்கும் நீக்குரோ யாருக்கும் வாக்களிக்கக் கூடியதாக எவரும் இல்லை. இந்த நிலைகள் மாறும் வரை நாம் திருப்தியடைய மாட்டோம். சமூக நீதி வெள்ளம் போலப் பெருக் கெடுத்து ஓடும் வரையும் தர்மம் நீரோடைபோல ஓடும் வரை நாம் திருப்தியுடன் இருகவே மாட்டோம்.

அநேக சங்கடங்களுக்கு மத்தியில் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள் என்பது நான் அறியாததல்ல. உங்களில் சிலர் குறுகிய சிறைக் கொட்டில்களிலிருந்து வந்துள்ளீர்கள். உங்களில் வேறு சிலர் உரிமைக்காகப் போராடுகையில் சட்டத்தின் கொடிய பிடிகளில் சிக்கி உழன்று உள்ளீர்கள். பொலிசாரின் மிருகத்தனமான செயல்களுக்கு உள்ளாகி உள்ளீர்கள். ஆட்சியாளரினால் தரப்பட்டு வரும் துன்பங்களில் பட்டுப் பழுத்துள்ளீர்கள். துன்பங்களிலிருந்து விடுபடுவோம் என்று விசுவாசத்தோடு தொடர்ந்து போராடி வருகின்றீர்கள். மிசிசிபிக்குத் திரும்புங்கள். அலாபாமாவுக்குத் திரும்புங்கள். தென் கறோலினாவுக்குத் திரும்பிப் போங்கள். ஜோர்ஜியாவுக்குத் திரும்புங்கள். வடபுல நகரங்களிலுள்ள உங்கள் சிறுகுடில்களுக்குத் திரும்புங்கள். ஏதோ விதமாக உங்கள் இன்றைய நிலைமைகள் மாறி விடும் என்று நினையுங்கள். துன்பக் கேணியில் உழல்வோம் என்று ஏங்காதீர்கள். எனது நண்பர்களே ! இன்று நான் ஒன்று கூறவிரும்புகிறேன். இன்றும் நாளையும் நான்படும் துயரங்கள் நீங்கி விடுமென்று கனவொன்று காண்கிறேன். இது அமெரிக்கரின் கனவில் ஆழமாகப் பதிந்த கனவாகும். இந்நாடு ஒரு நாள் எல்லா மக்களும் சமமாகவே படைக்கப் பட்டுள்ளார்கள் என்னும் உண்மையை உணரும் காலம் வரும் என்று கனவு காண்கிறேன்.

ஜோர்ஜியாவின் சிவந்த மலைகளில் வாழும் அடிமைகளும் முற்கால அடிமை கொள்வோரின் பிள்ளைகளும் சமபந்தியில் அமர்ந்து எல்லோரும் சமமானவர்களே என்னும் உண்மையை உணரும் காலம் வரும் என்று கனவு காண்கிறேன். அநீதிக்கும் அடக்குமுறைக்கும் உட்பட்டு வாடும் மிசிசிபி வாழ் மக்கள் சுதந்திரம், நீதி கொண்டகாற்றை விரைவில் சுவாசிப்பார்கள் என்று கனவு காண்கிறேன். இனவாத அலபாமா ஆளுநர்கூட வெளியிடப்பட்ட கொடிய அறிக்கைகள் அனத்தையும் திருப்பிப் பெறுவார். அலபாமாவில் கறுப்பு இன ஆண்களும் பெண்களும் வெள்ளை இன ஆண்களோடும் பெண்களோடும் சகோதரர் சகோதரிகள் போன்று கைகோர்த்துத் திரியும் காலம் வரும் என்றும்கனவு கான்கிறேன்.

எனது நான்கு சிறு பிள்ளைகளையும் ஒரு நாள் தோலின் நிறத்தைக் கொண்டு கணிக்காமல் அவர்களுடைய ஒழுகும் நடத்தையைக் கொண்டே கணிக்கும் காலம் வருமெனவும் கனவு காண்கிறேன்.

பள்ளங்கள் நிரபப்பட்டு மலைகளும் குன்றுகளும் அகற்றப்பட்டு மேடும் பள்ளமும் அற்று சமவெளிகளாக ஆக்கப்பட்டு கோணல் மாணலான பாதைகள் அணத்தும் நேராகக்கப்பட்டு இறைவனின் பெருமையை அணைவரும் ஒருங்கே காணக் கூடும். இது எங்கள் நம்பிக்கை. இந்த நம்பிக்கையோடு நான் தென்புலம் நோக்கித் திரும்பிச் செல்கிறேன். இதே நம்பிக்கையோடு துன்ப மலைகளைச் சரிப்போம் என்ற உறுதியான நம்பிக்கையும் இருக்கிறது. எமது தேசத்து குழப்பநிலை நீங்கி அழகிய சகோதரத்துவ இன்னிசை எங்கும் ஒலிக்கும். இதே நம்பிக்கையோடு ஒன்றாகப் போராடுவோம். ஒன்றாகவே சிறை செல்வோம். விடுதலைக்கு ஒன்று சேர்வோம். ஏனெனில் ஒரு நாள் அணைவரும் விடுதலை பெறுவோம்.

நன்றி - Towards the Future.

**தமிழில் க. நடனசபாபதி**

குறிப்பு : மாட்டின் லூதர் கிங் அமெரிக்க நீக்குரோ மக்களின் விடுதலைக்கு குரல் கொடுத்துப் போராடிய தலைவர். அவர் புரட்சிகர வன்முறையை மறுத்து அகிம்சை வழியில் போராடி கறுப்பின மக்களுக்கு சமத்துவமும் சமூக நீதியும் பெற்று விடலாம் என நம்பியவர். ஆனால் அமெரிக்காவின் வெள்ளை நிறவெறி அவரை அமைதியாக இறப்பதற்கு அனுமதிக்கவில்லை. அவர் நிறவெறி கொண்ட துப்பாக்கியாளனால் கொல்லப்பட்டார். அவரது வார்த்தைகளில் அமெரிக்காவின் நிறவெறியையும் பாகுபாட்டையும் கண்டுகொள்ளலாம். (ஆ.ர்.)

●●●

## நோர்வேயின்

5ம் பக்க தொடர்

ம.தி.மு.க. என்பன மேடை முழக்கங்களின் பின்பு பா.ஜ.க. முடிவுகட்கு உடன்பட்டு போவதையும் நாம் கான்கிறோம். இந்து மத வெறியும் தென்னிந்திய விரோத உணர்வும் கொண்ட சிவ சேனைத் தலைவர் தக்கரேயும் சீனவிரோத, பாகிஸ்தான் விரோத நிலைபாடுகளில் மும்முரமான பெர்ணாண்டெசும் விடுதலைப்புலிகளுக்காக பி.ஜே. பியுடன் முறித்துக் கொள்ளப் போகிறவர்களல்ல. எனவே இந்திய அரசாங்கம் எடுக்கிற நிலைப்பாட்டில் கட்சி அரசியல் சார்ந்து மட்டுமன்றி அதற்கும் அப்பாலான அதிகார வர்க்க நலன் சார்ந்த அரசியலையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடுகடத்துமாறு தனது வேண்டுகோளை அண்மையில் இந்திய அரசாங்கம் புதுப்பித்துள்ளதன் காரணத்தை இந்த அடிப்படையிலும் நோர்வேயின் சமாதான முயற்சியின் பின்னணியிலும் பார்த்தால் இந்திய அதிகார வர்க்கம் இலங்கையில் எந்த விதமான அமைதியை விரும்புகிறது என உணரலாம்.

இந்திய அரசாங்கம்நோர்வே பற்றி உற்சாகமின்மையை மட்டுமே காட்டுகிறது. பெரிய பத்திரிகை நிறுவனங்கள் நோர்வேயின் சமாதான முயற்சிகட்குக் குழிபறிக்கிற விதமான காரியங்களில் குறியாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். இதன் காரணம் என்ன? இன்று இந்திய அதிகார வர்க்கம் தென்னாசியாவில் மேலாதிக்கம் பற்றிக் குறியாக உள்ளது. காங்கிரஸ் ஆட்சியானாலென்ன, பாரதீய ஜனதா வானாலென்ன, அந்த வர்க்கத்தின் நலன்களை அவை பேணாமல் இருக்க முடியாது. இந்திய தேசியவாதம் என்பது அந்த வர்க்க நலன்களின் ஒட்டு மொத்தமான அடையாளமே. இந்திய தேசிய நலன்கள் என்பன அந்த வர்க்க நலன்கள் தான். இங்கே தான் இடதுசாரிக் கட்சிகள் எனப்படும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்திய தேசியவாதத்துடன் செய்துவைத்துள்ள சமரசம், அவற்றை ஒடுக்கப்பட்ட மக்களினின்றும் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களிலிருந்தும் மேலும் மேலும் தனிமைப் படுத்தியுள்ளது.

இந்திய தேசிய நலன்கள் என்ற பேரில், இந்திய அரசு கடைப்பிடிக்கும் அயற் கொள்கை யாரால் தீர்மானிக்கப் படுகிறது ? பாராளுமன்றத்துக்கு வெளியே இயங்கும் நிருவாக யந்திரம், ஆயுதப் படைகள், உளவு நிறுவனங்கள் என்பன, ஆளுங்கட்சிகள் மாறும் போது மாறுவதில்லை. அரசாங்கத்தின் பல்வேறு முடிவுகளைத் தீர்மாணிக்கும் வலிமையைப் பாராளுமன்றமோ ஆட்சி மாற்றமோ பறிப்பதில்லை. எனவே தான், இந்திய அரசாங்கம் அரச யந்திரத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகிற வர்க்கத்தின் தேவைகளை அனுசரித்தே நடந்து கொள்ளுகிறது.

இந்திய அதிகார வர்க்கம் நோர்வேயின் குறுக்கீட்டை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் நலன் சார்ந்ததாகவே காணுகிறது. தனது குறுக்கீட்டுக்கு பாதகமாக இருக்கக் கூடிய எதையும் அது சகித்துக் கொள்ள மாட்டாது. நோர்வேயின் பேச்சுவார்த்தை முயற்சிகளை இந்திய அரசு நேரடியாக எதிர்க்க முடியாது. எனவே வேறு கருவிகளை அது பயன் படுத்துகிறது.

இந்திய உளவு நிறுவனங்கள் 1970 களிலிருந்தே இலங்கையின் அரசியலில் மிகுந்த ஊக்கத்துடன் செயற்பட்டு வந்துள்ளன. தமிழ் விடுதலைப் போராட்ட இயக்கம் ஒவ்வொன்றிலும் வேறுபடும் அளவுக்கு இந்திய உளவு நிறுவன ஊடுருவலும் ஆதிக்கமும் இருந்து வந்ததை நாம் அறிவோம். ஜே.வி.பி கூட 1985 அளவில் இந்திய உளவு நிறுவனங்கள் மூலம் பயிற்சி பெற்றதாகத் தகவல்கள் உள்ளன. குறுகிய சிங்கள இனவாத அமைப்புகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுவந்துள்ள நெருக்கமும் தற்செயலானவை என்று கருத இடமில்லை. முஸ்லிம்கட்கு விரோதமான செயற்பாடுகளில் இறங்கியுள்ள வீர விதான போன்ற அமைப்புக்கள் இந்திய ஆட்சி இயந்திரத்தில் வலுவாகத் தம்மைப் பிணைத்துள்ள இந்துத்துவ மத வெறியர்களின் ஆதரவை உடையனவா என்ற சந்தேகங்கள் சில காலமாகவே உள்ளன.

இவை போன்ற சக்திகள் நோர்வேயின் சமாதான முயற்சியைக் குலைக்கும் முயற்சிகளில் நேரடியாகவே இறங்குகின்றன. இங்கே உள்ள தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் எனப்படுவனவற்றிடையே நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஆதரவைத் திரட்டுகிற அக்கறை இல்லை என்பதற்கு அண்மையில் புதிய ஜனநாயகக் கட்சி சமாதான முயற்சிக்கு ஆதரவாகச் கூட்டிய கூட்டத்திற்கு அவை சமுகமளிக்காமை ஒரு சான்று. மறுபுறம், பத்துத் தமிழ் கட்சிகள் பின்னர் தமக்குள் எடுத்த முடிவுகளில் நோர்வேயின் முயற்சிகளை ஆதரிப்பதற்கான எதுவித தீர்மாணமும் நிறைவேற்றப்படவில்லை. இந்தியாவின் தயவில் வளர்ந்து சீரழிந்த தலைமைகள் இன்னமும் இந்தியாவுடனான உறவுகளைத் துண்டித்து விட்டதாகக் கூறமுடியாது. இந்தியத் தலையீட்டை வற்புறுத்தத் தமக்குக் கிடைக்கிற வாய்ப்புகளை இவர்கள் தவற விட்டதும் இல்லை. எனவே நோர்வேயின் முயற்சிகள் பற்றித் தமிழ்த் தேசியவாதக் கட்சித் தலைமைகளின் அசமந்தமான போக்குக்கு இலங்கைக்கு வெளியிலும் காரணங்களைத் தேடவேண்டியுள்ளது.

நோர்வேயின் முயற்சிகளை நேர்மையான இடதுசாரிகள் ஆதரிக்க காரணங்கள் பல. இன்று இருதரப்பினருக்கும் பகையற்ற ஒரு நாடாக நோர்வே இருக்கிறது. அந்த வகையில் போர் நிறுத்தம் பற்றிய ஒரு உடன்பாட்டை இயலுமாக்கவும். பேச்சுவார்த்தைகளில் சமரசத்துக்கு உதவும் ஒரு நேர்மையான தரகராகவும் இயங்க உள்ள வாய்ப்பு எல்லா நாடுகட்கும் இல்லை. நோர்வேயால் நியாயமான தீர்வை உறுதி செய்ய முடியாது. ஆனால் இன்றைய சூழலில் அமைதிக்கான அதிகப்பட்ச வாய்ப்பு நோர்வே மூலமே கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இன்றைய அதி முக்கிய பிரச்சனை தேசிய இனப்பிரச்சனை என்பதாலேயே இந்த முயற்சியை ஆதரிப்பது இடது சாரிகளின் கடமையாகிறது.

அமெரிக்காவோ ஐரோப்பிய நாடுகளோ தமது நலன்களைப் பேண நோர்வேயைப் பாவிக்கக் கூடும் என்பது பற்றி நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். அதைத் தவிர்ப்பதாயின் பேச்சுவார்த்தைகள் நேர்மையாகவும் தேசிய இனப்பிரச்சனையை நியாயமானதும் நிலைக்கக் கூடியதுமான முறையில் தீர்க்கும் நோக்குடனும் நடத்தப்பட வேண்டும். மூன்றாந் தரப்பை விட முரண்படும் தரப்புகளின் நடத்தை இங்கு முக்கியமானது. பேச்சுவார்த்தைகளின் தோல்வியை விரும்பும் சக்திகளின் கைகள் பற்றியே கூடிய கவனம் காட்ட வேண்டி இருக்கிறது. எனவே தான் சமாதான முயற்சிகட்கு ஆதரவாக வெகுசனங்கள் நடுவே கடுமையான பிரசார முயற்சிகள் அவசியமாகின்றன.

நன்றி - நூலகத்திட்டம்



## இலக்கிய விமர்சனம்

# ஈழத்து எழுத்தாளருள் ஒருசாரரர் தீராத நோயாளராகி விட்டனரா? யார் ?, எவர் ?

**ஈழத்துத் தேவன்பூதனார்**

இலங்கைத் தமிழர் வாழ்வும் வகிபாகமும் என்ற தலைப்பிலே கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இரண்டு சிற்றாய்வேடுகள் வெளிவந்துள்ளன.

கார்த்திகேசு சிவத்தம்பியின் "இலங்கைத் தமிழர், யார்? எவர் ?" என்ற நூலும் செல்லையா யோகராசா என்பவரின் "இலக்கியத் தேட்டம்: ஈழத்து நவீன இலக்கியம்" என்ற நூலுமே அவை.

உடனடியாக செல்லையா யோகராசாவின் நூலையே முதலில் அறுவைச்சிகிச்சைக்கு உட்படுத்தப்படுத்த வேண்டியுள்ளது. முன்னையவரின் நூலை மறுமுறை பார்ப்போம்.

இந்நூலில் செ. யோகராசா பல அரிய கண்டுபிடிப்புகளை உதிர்த்துள்ளார்.

"ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி உன்னத நிலையை எட்டியுள்ளமையும் சிறுகதை வளர்ச்சி ஓரளவே திருப்தி தருகின்றமையும் நாவல் வளர்ச்சி சந்தேகமின்றி அதிருப்தி அளிக்கின்றமையும் நன்கு புலப்படுகிறது. இவ்வாறான இறங்கு நிலை வரிசையினை மனம் கொண்டே எனது உரையும் நவீன கவிதை, சிறுகதை, நாவல் என்ற ஒழுங்குமுறையில் இடம்பெற்றுள்ளது. தவிர ஈழத்துப் புனைகதையின் வளரா நிலை அது பற்றிய காரணங்களைத் தேடும் பயணத்திற்கு ஆற்றுப்படுத்தியதில் தவறில்லை என்றே கருதுகிறேன்" எனத் தனது தீர்ப்பைக் கூறிவிடுகின்றார். பிரச்சனை என்னவெனில், ஈழத்து இலக்கியம் தனக்கே உரிய தனித்துவப் பண்புகளையும் பாரம்பரியங்களையும் கொண்டுள்ளது. அதன் சர்வதேசியத் தன்மையைத் தேடிக் கண்டறிவதில் நிதானமும் சகிப்புத்தன்மையும் பொறுமையும் ஆய்வுத்திறனும் அவசியம். அது இன்மையால் பரீட்சைக்கு புள்ளியிடும் ஆசிரிய மனோபாவத்துடனும் பல்கலைக்கழக மேதாவிலாசத்துடனும் ஈழத்து நாவலின் வளராநிலைபற்றிய காரணங்களைத் தேடும் பயணத்திற்கு செ. யோகராசா ஆற்றுப்படுத்த முனைவது தான் வருத்தமளிக்கிறது.

"ஈழத்து எழுத்துக்களுக்கு அடிக்குறிப்பு வேண்டும்" என்று தமிழ்நாட்டு மேதைகள் இழிவபடுத்திய போது அறுபதுகளில் எழுத்தாளர் படை எழுச்சிகண்டது. இப்போது யாரும், எவரும் உள்ளிருந்தே கொல்லும் வியாதி போல் எவ்வாறும் தீர்ப்பளித்து விடலாம் என்ற நிலை தோன்றி விட்டது.

ஈழத்து நாவல் வளர்ச்சியில் யோகராசா கொண்ட அதிருப்திக்கு காரணமென்ன என்பதனை முதலில் பார்ப்போம்.

ஈழமக்களது வாழ்வியல் பிரச்சினைகள் அறுபதுகள் தொடக்கமே ஈழத்து நாவல்களில் வெளிப்படுவதில் முற்போக்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு கவனத்துக்குரியதெனும் செ. யோகராசா எண்பதுகளில் இடம்பெற்ற அரசியல், சமூக மாற்றங்கள் சிறுகதை போன்று நாவலில் முனைப்பு பெறவில்லை என்பதே அவர் அடையும் அதிருப்தியின் அடிப்படையாகும்.

புனைகதை என்பது அனுபவத்தின் அறுவடையெனில் ஈழத்து எழுத்தாளர் பலரும் பரந்து பட்ட அனுபவங்கள் பிரச்சினைகளுக்கு போதியளவு முகங்கொடுத்து வந்துள்ளதாகக் கூறுவதற்கில்லை (எண்பதுகளுக்குப் பின்பே அத்தகைய நிலையில் ஓரளவு மாற்றமேற்பட்டுள்ளது) என்றும் சமூகப் பிரச்சனையுடன் முட்டி மோதிய எழுத்தாளர்களிடம் படைப்பாற்றல் வறுமை உண்டென்றும் தாம் சார்ந்த கோட்பாடுகளுக்கே முதன்மை கொடுக்கின்றனர் என்றும் தனது தீர்ப்பை எழுதியிருக்கின்றார். செ. யோகராசா.

எனவே அவரது கணிப்பின் சாரம் என்னவெனில்

(1) 1980 களில் பின் சமூக மாற்றம் இடம்பெற்றது.

(2) அச்சமூக மாற்றத்தை முற்போக்கு எழுத்தாளர் காணத் தவறியுள்ளனர்.

(3) எழுத்தாளரின் படைப்பாற்றல் வறுமை.

(4) அவர்கள் மாக்ஸிச கோட்பாட்டுக்கு முதன்மை கொடுத்தமை. என்பன வாகும்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சமன் முற்போக்கு எழுத்தாளர் என்ற பிரமைக்குள் சிக்கியுள்ள செ. யோகராசா.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினுள் மட்டுமன்றி இலங்கையின் பலவேறு ஸ்தாபனங்களிலும், சங்கங்களிலும், தனித்தும் முற்போக்கு என்ற நாமகரணம் பூணாமலும் பலர் மக்கள் எழுத்தாளர் வாழ்ந்துள்ளனர் என்பதனை காணமறுப்பது ஏனோ புரியவில்லை. 1980 களின் பின்பு இலங்கையில் ஏற்பட்டது சமூக மாற்றம் அல்ல. சமூக நெருக்கடி. அரசியல் மாற்றம் அல்ல, யுத்தமாக அரசியல் மாறிய அரசியல் நெருக்கடி ! அவ்வளவே ! இதனை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தில் மாக்ஸிச கோட்பாட்டின் முதன்மையை மறுதலிக்க எந்த செல்லையாவின் புத்திரர்க்கும் நியாயாதிக்கம் இருக்க முடியாது.

ஈழத்து எழுத்தாளர் பலரும் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள் என்றும் மூன்று தசாப்தங்களின் முன்னரே நின்று போய்விட்ட வீரகேசரி பத்திரிகையின் திட்டமிட்ட மாதாந்த நாவல் வெளியீட்டின் முயற்சியின் வெற்றி பற்றிப் புரிந்து கொள்ளும் செ. யோகராசா கவிதை நூல் வெளியிடுவதும் நாவல் நூல் வெளியிடுவதும் புத்தக அளவில் சமமில்லை என்பது பற்றியோ அல்லது சிறுகதைகள், வாரப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவருவதும் தனிநூல்களாக நாவல்கள் வெளியிடுவதும் வெவ்வேறு விடயங்கள் என்பதை ஏனோ இவர் புரியத்தயங்குகிறார். கோமல் சுவாமிநாதன் சுபமங்களாவில் நடத்த விரும்பிய குறுநாவல் போட்டிக்கு பரிசளிக்க செ. யோகராசாவின் சமூக மாற்றத்திற்குட்பட்ட தமிழ் சமூகத்தால் ஏன் முடியாமல் போனது ? இச் சங்கடங்களை எண்பதுக்குப் பிற்பட்ட செ. யோகராசாவின் சமூக மாற்றத்தால் ஏன் தீர்க்க முடியாமல் போனது ?

எழுத்தாளரினால் எழுதப்பட்ட நாவல்கள் நூலாவது அவரின் மரணத்தின் பின்போ அல்லது 2,3 தசாப்தங்களின் பின்போதான் காரியசித்தியாகிறது. உதாரணமாக இளங்கீரன், அங்கையன் கைலாசநாதன், கே. விஜயன், கசின் ஆகியோரின் அண்மைய நாவல் வெளியீடுகளைக் கூறலாம். சுபமங்களாவுடன் தேசிய கலை இலக்கியப் பேரவை இணைந்து நடாத்திய குறுநாவல்கள் இன்னும் பிரசுர வாய்ப்பற்ற பொருளாதார வறுமை உள்ளதே ஐயா ! இவ்வாறிருக்க ஆர்ப்பாட்டங்களுடனான வெளியீட்டு விழாக்களும் தகுதிய ற்றோர்களை பிரபல்யமடையச் செய்வதும் பற்றி எத்தகைய அளவுகோல்களைப் பாவித்துப் புழுங்குகிறீர்கள் ! சிறந்த எழுத்தாளர் உருவாக்கத்தில் மறைமுக ஆதிக்கம் செலுத்தும் பிரசுர நலை பற்றி இருண்டதெல்லாவற்றையும் பேய் என ஏன் பயங்கொள்கிரீர்களோ தெரியவில்லை. அளவு ரீதியான வளர்ச்சியே பண்பு ரீதியான மாற்றத்தை உண்டு பண்ணுமென்ற இயங்கியல் விதி பற்றி அறியீரோ !

எப்படியிருப்பினும், தனி எழுத்தாளரது படைப்புகள் (டானியல் போன்ற) ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்பதை ஒப்புக் கொண்டுள்ள செ. யோகராசா அவ்வாறே ஆய்வு நடத்தப்படாமலேயே எவ்வாறு எழுத்தாளரின் படைப்பாற்றல் வறுமையைச் சுட்டிக் காட்ட முடியும் ?

ஆக, சாராம்சத்தில் 1980களில் முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெறற் தீண்டாமைக்கெதிரான போர் பற்றியோ, தமிழ் மக்களின் ஜனநாயக மாற்ற வளர்ச்சிப், போக்குப் பற்றியோ, மண்வாசனை, பிரதேச வழக்கு, இழிசனர் இலக்கியம் சர்வதேசிய மொழிபெயர்ப்பு நூல் பரிமாற்றமும் பயிற்சியும்பற்றியோ அக்கால எழுத்தாளரின் எழுச்சியை இம்மியும் புரிந்து கொள்ளாதவர் போல் பாசாங்கு பண்ணுவதுடன் இருட்டடிப்புச் செய்ய முயற்சித்து தனது மாக்ஸிச வெறுப்பை வெளிப்படுத்துகின்றார்.

இறுதியாக, அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் போன்ற சிந்தனைகளின்பால் புலமை ரீதியில் ஈடுபாடு காட்டாத நிலையும், அவற்றின் சாதகமான அம்சங்கள் பற்றி பொருட்படுத்தாத நிலையும் ஈழத்து ஆய்வாளரிடத்தில் காணப்படுகின்றதென்ற தனது மனக்கவலையை பகிர்ந்து கொள்கிறார். செ. யோகராசா. எனவே அவர் மாக்ஸிச விரோத நிலைப்பாட்டில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதை உணர முடிகிறது. அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் (பின்னவீனவியம் பற்றிய முருகையனின் கட்டுரையை தாயகம் 2000 டிசம்பரில் காண்க) என்பன சமூகத்தை வியாக்கியானிப்பதில் கவனம் செலுத்தினும் சமூக மாற்றச் சிந்தனையான மாக்ஸிசத்தை நிராகரிப்பதில் முன் நிற்பதுடன் சமூக மாற்றத்தைப்பற்றிய எவ்வித கரிசனையுமற்று சமூக அராஜகத்துக்குத் துணைபோவதனை தெளிந்துகொள்ள அதிநவீன புலமைத்துவ அறிவு எதுவும் பெரிதாகத் தேவையில்லை.

இவரது பின்னவீனவியம் என்ற பீடத்தில் இவர் எழுந்து நின்று சில முடிந்த முடிபுகளை வெளியிடுகின்றார்.

(1) ஈழத்தில் நாவலாசிரியர்கள் இல்லை. கதாசிரியர்களே உள்ளனர்.

(2) மாக்ஸிச நாவலாசிரியர்களின் நாவல்களில் கதைச்செ மூமை குறைவு.

(3) சாதிப்பிரச்சினையுடன் தொடர்பான நாவல்கள் யாவும் இலக்கியங்களாக வரும் வரலாறுகளே முக்கிய பிரச்சினை இவை எந்தளவுக்கு இலக்கியங்கள் என்பதே !

(4) ஈழத்துப் புனை கதை வளர்ச்சி அறுபதுகளின் பின்னர் பாரிசவாதத்திற்குட்பட்டுள்ளதுடன் சந்தேகமின்றி ஈழத்து விமர்சன வளர்ச்சியுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

(5) படைப்பின் ஆக்கக்கூறுகளை முற்போக்கு விமர்சகர்கள் வற்புறுத்த தவறி விட்டணர்.

(6) ஈழத்து எழுத்தாளருள் ஒருசாரார் (நோய்) தீராத நோயாளிகளாகிவிட்டனர்.

பின்னவீனவியச் சித்தாந்தியாகிய செ. யோகராசாவின் வியாதிக்கு பத்தியங்காத்து புளியெண்ணெய் தேய்ப்பதோடு வேப்பிலையும் அடிக்கவேண்டும்.

"தமிழுக்கு எவரும் எங்கிருந்தும் செய்யும் சேவை தமிழகத்தினால் மதிக்கப்படும்பொழுதுதான் நிறைவு பெறுகிறது. ஏற்றுக்கொள்ளப்படுகிறது" என்று அண்மையில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தமிழகத்தில் வி.க. விருதினைப் பெறும்பொழுது நன்றியுடன் கூறியிருந்தமை ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்.

1968ல் பேராசிரியர் க. கைலாசபதி "தமிழ் நாவல் இலக்கியம்" நூலின் முன்னுரையில் தமிழ் நாவல் பற்றி நூல் எழுதுவதற்கு இன்று இலங்கையிலுஞ் சிறந்த வாய்ப்புள்ள இடம் பிறிதில்லை என்பது எனது துணிபு" என்கிறார்.

ஈழத்து இலக்கிய உலகு இது பற்றி முடிவு செய்யும் வரை பொறுத்திருப்போம்.

இனி, செ. யோகராசாவின் அதிருப்தி அளித்த ஈழத்து நாவலை விடுத்து, உன்னதம் கண்ட ஈழத்துக் கவிதை பற்றிய அவரது பார்வையை நோக்குவோம்.

ஈழத்து நவீன கவிதையின் வளர்ச்சி பற்றி ஆராயப்புகுந்த செ. யோகராசாவின் 1945 லிருந்து காலப்பாகுபாட்டை 1960, 1970, 80, 90 என எந்தக் கருத்தின் அடிப்படையும் இன்றி வாய்பாட்டு ரீதியில் பாடசாலை கணக்குப் போன்று சிறுபிள்ளைத்தனமாய் வகுத்திருப்பதான அவரது ஆய்வில் அவர் ஈழத்து தமிழ் கவிதைப் பாரம்பரியத்தின் வளர்ச்சிப் படிநிலைகளை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பார்க்கத் தவறி விடுகிறார் எனலாம்.

செ. யோகராசாவின் தாக்குமுனை மக்கள் இலக்கியக்காரரின் மீது மையங்கொண்டுள்ளது. அவரது துண்ணாய்வுக் கண்டுபிடிப்புகள் பின்வருமாறு :

(1) பொதுவுடைமைச் சிந்தனை வழிப்பட்ட கவிதைகள் பொதுவாகப் பிரச்சாரப் பாங்குடையனவாக விளங்கின.

(2) இதுவரை பேசாப் பொருட்கள் (எ-டு : பாலியல் நடத்தைகள்) கவிப் பொருளாகின்றன.

(3) முற்போக்கு கவிஞர்கள் காதல், இயற்கை முதலியன சார்ந்த தன்னுணர்ச்சிக்கவிதைகளை எழுதுவது தவறு என எழுதாதயாப்பாகத் தடையுத்தரவு விதித்திருந்தனர்.

செ. யோகராசாவின் ஆய்வுப் பார்வையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் மகாகவி இல்லாமையால் அவர் ஓர் முற்போக்காளராக விளங்கார் என்று எண்ணுகின்றேன். எனவே அவரது கவிதையை உதாரணமாகத் தருவதன் மூலம் அவரது மூன்றாவது கருத்தை மறுதலிக்கின்றேன்.

"கவி எழுத  
இன்னவைத்தான் ஏற்ற பொருள் என்று  
பிறர் சொன்னவற்றை  
நீர் திருப்பிச் சொல்லாதீர்  
மின்னல், முகில் தென்றலினை  
மறவுங்கள்  
மீந்திருக்கும்  
இன்னல், உழைப்பு இவைகளினைப்  
பாடுங்கள்"....

என்று மகாகவி பாடினாரெனில் அது காதல் இயற்கை மீது ஈழத்து தமிழ் கவிதைப் பாரம்பரியத்தினர் கொண்டுள்ள நிலமானிய ரசனையின் நீட்சிக்கெதிரான குரலே தவிர வேறல்ல.

யாழ்ப்பாணத்தில் எழுந்த "கனகி புராணம்" நவீன கவிதையின் வாசலைத் தொட்டதெனலாம். அவை பாலியல் நடத்தைகள் பற்றிப் பேசின. ஆனால் நவீன கவிதையென்று பாலியல் பிறழ்வுகளை ஈழத்திலக்கியத்தில் திணிப்பதும் அதனை அங்கீகரித்து செ. யோகராசா ஏற்றிப்போற்றுவதும்தான் புரியவில்லை.

உம் சகோதரியோ மகளோ  
யாரும் விதிவிலக்கல்ல.  
எனது ஆண்குறிவிறைக்கக்கூடியது  
அது இயற்கை......

என்று செ யோகராசா எடுத்துக்காட்டும் கல்யாணியின் கவிதை பின்நவீனவியத்தின் பார்வைக் கோளாறும் தூசணமுமே தவிர தமிழ்க்கவிதையல்ல என்பது வாசகர்கள் புரிந்து கொள்ள ஒரு பொழுது தேவையில்லை.

ஆக, இவர்களை எவ்வாறு ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தினுள் நம்பி அடுப்பது என்பதே இலக்கிய ஆர்வலர்களிடம் எழும் கேள்வியாகும்.

பாரமார்த்த குருவும், சீடர்களும் ஈழத்திலக்கியத்தில் ஊடுபாவாயுள்ளதனை இளையதலைமுறையினா உணரத்தலைப்பட்டுள்ளனர்.

இந் நூலில் இவர், கவிதை பற்றியும் கவிஞர்கள் பற்றியும் அவர்களின் முக்கிய இடம்,முதன்மையிடம், முதன்மையானவர், கவனத்துக்குரியவர் என்ற இவரின் புள்ளியிடலையும் பட்டியலையும் உரித்துப் பார்த்தால் வெங்காய சமாச்சாரத்தான்!

தமிழகத்தின் தலித்தியம் பற்றியும் பேரினவாதம் பற்றியும் தமிழ் அரசியல் பற்றியும் முனைப்புக் கொண்டுள்ள செ. யோகராசா தமிழ் தேசியத்தின் ஊற்று மூலமாகவும் சர்வதேச வியாபக உண்மையான மாக்ஸியத் தேடலாகவும் அமைந்த தீண்டாமைப் போரைக் ஈழத்தில் எழுதப்பட்ட கவிதைகளும், நாவல்களும் ஈழத்து நவீன இலக்கியமாகி சமூக அசைவியக்கத்தில் ஆற்றிய பங்களிப்பு வெறும் அரசியல் பிரச்சாரமல்ல என்பதை வரலாறு உணர்த்தும்.

கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும். விமர்சனப் போலி மேதாவிகளின் உன்னதங்களை கட்டுடைக்கும் இளைஞர்கள் எதிர்காலத்தில் எழுவர், நிமிர்வர்.

## எதிரானவர்களை

5ம் பக்க தொடர்

1977ல் மட்டக்களப்புத் தேர்தல் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாகி இருந்தது. இரண்டு ஆசனங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெல்ல வாய்ப்பு இல்லை என்பது பலர் அறிந்தது. எனினும் இரண்டு ஆசனங்களையும் வெல்லலாம் என்ற அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ராஜதுரையையும் காசி ஆணந்தனையும் நிறுத்துவதாக் முடிவு செய்யப்பட்டது.இந்த முடிவு ராஜதுரைக்கு விருப்பமான ஒன்றல்ல. அவரை மேலும் அவமதிக்கும் நோக்குடன் அமிர்தலிங்கம் காசி ஆனந்தனுக்காகப் பிரசாரம் செய்யும்படி கூட்டணி ஆதரவாளர்களை வேண்டிக் கொண்டார்.

காசி ஆனந்தன் ஒரு ஜனரஞ்சகமான மேடைப் பேச்சாளர் உணர்ச்சி பொங்ஙும் விதமாகப் பேசுவதோடு தமிழ் இன உணர்வு பொங்கும் கவிதைகட்காகவும் பெயர் பெற்றவர். இதைவிட முக்கியமாக அமிர்தலிங்கத்துக்கு அவர் நெருக்கமானவருமாக இருந்தார். அமிர்தலிங்கத்தின் 1970க்குப் பின்பான அரசியல் தீவிர நிலைப்பாட்டால் கவரப்பட்டவர்களுள் காசி ஆனந்தனும் ஒருவர் ஆயினும் பாராளுமன்ற வெற்றி தோல்விகளை இந்தத் தகுதிகள் மட்டுமே முடிவு செய்வதில்லை. அமிர்தலிங்கம் ராஜதுரையின் செல்வாக்கைக் குறைவாகவே மதிப்பிட்டார். அதை விட, ராஜதுரைக்கு எதிராக அவர் செயற்படுவதாக அடையாளங் காணப்பட்டதன் விளைவாக மட்டக்களப்பில் கூட்டணி மீதான நம்பிக்கை பாதிக்கப்பட்டது.

அமிர்தலிங்கம் தலைமை பிரசாரப் படுத்தியது போல 1977ல் கூட்டணி இரண்டு ஆசனங்களை வெல்லவில்லை. அவர் உள்ளூர விரும்பியதுபோல ராஜதுரை தோற்கவுமில்லை. அங்கு கூட்டணியின் ஒரே பாராளுமன்ற உறுப்பினராக ராஜதுரை வென்றார். அதன் பின்பு அமிர்தலிங்கத்தின் மீது பழி தீர்க்க அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதை அவர் தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே செய்து காட்டினார். அந்த வாய்ப்பு 1978ல் ஜே.ஆர் ஜயவர்தனவால் உருவாக்கப்பட்டது. ஜே.ஆர். ஜயவர்தனவால் அமிர்தலிங்கம் முட்டாளாக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களில் இது மாதிரிக்கு ஒன்று. இனி 1977க்குப் பின்பு அமிர்தலிங்கத்தின் அரசியல் பாதையையம் பயணத்தையும் பார்ப்போம்.

## வெகுஜன

5ம் பக்க தொடர்

வேண்டும்.

பல்கலைக் கழக சமூகமும் - மக்களும் இணைந்து முன்னெடுக்க முற்பட்டுள்ள இந்த வெகுஜன இயக்கம் கடந்த காலங்களின் பாதகமாக அமைந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்து தவறானவற்றைப் புறம்தள்ளல் அவசியமாகும். பொதுக் கோரிக்கைகளுக்காக பரந்த சக்திகளை ஐக்கியப்படுத்துதல் வேண்டும். குறுகிய அரசியல் சிந்தனைகள் குறுக்கிடாதவாறு பார்த்துக் கொள்ளல் வேண்டும். பழமைவாதப் பிற்போக்குத் தனங்கள் இனத்தின் மொழியின் பெயரால் ஊடுருவுவதைத் தடுத்தல் வேண்டும். படிப்படியாக அனைத்து மக்களையும் இக் கோரிக்கைளின் பின்னால் ஒன்றிணைக்க முற்படல் வேண்டும்.

இன்று தமிழ் முஸ்லீம் மலையக மக்கள் தனித்தனியாகத் தம்மைப் பார்க்குமாறே நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். தமிழ் சிங்கள மக்கள் முற்று முழுதாகவே துருவப்படுத்தப் பட்டுள்ளனர். எல்லோரையும் ஒரே குடையின் கீழ் ஐக்கியப் படுத்துவது என்பது இன்றைய யதார்த்தமாக இல்லை. ஆனால் ஒருவருக்கொருவர் ஆதரவையும் பரஸ்பரம் ஒத்துழைப்பையும் வழங்க முடியும். எனவே யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை சுயநிர்ணய உரிமை என்பவற்றுக்கான தெளிவையும் அதன் அரசியல் உள்ளடக்கத்தையும் பரந்தளவில் பிரசாரப்படுத்தி முன்னெடுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பேரினவாத ஒடுக்குமுறை கொண்ட அரசாங்கம் பரப்பி வரும் பொய் உரைகளை மறுதலித்துக் கொள்ள இயலும். மக்களுடைய வெகுஜன எழுச்சியை எத்தகைய அடக்கு முறைகலாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை ஆளும் வர்க்க பேரினவாத சக்திகளுக்கு மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டுவ......

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
PUTHIYA POOMI
சுற்று 08 ஜனவரி/பெப்ரவரி 2001 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 38

## தோழர் சண் நினைவாக !



இலங்கையின் பொதுவுடமை இயக்க முன்னோடிகளில் தோழர் நா. சண்முகதாசன் முக்கியமானவராக இருந்தார். மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனையை உயர்த்திப் பாதுகாத்து முன்னெடுத்ததில் தனது ஆற்றல் முழுவதையும் பயன் படுத்தி நின்றார். அதன் மூலம் தேசிய நிலைப்பட்ட முக்கியத்துவமுடைய புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களை கட்சியால் முன்னெடுக்க முடிந்தது. அவரது சாதனைகள் தவறுகள் என்பனவற்றிலிருந்து உரிய படிப்பினைகளைப் பெற்று மாக்சிச லெனினிச இயக்கத்தை முன்னெடுப்பதே அவருக்குரிய சரியான நினைவு கூரலாகும்.

## டொலரின் விலை அதிகரிப்பால்

# உலக வங்கிக்கு மட்டற்ற மகிழ்ச்சி உழைக்கும் மக்களுக்கு வயிற்றில் அடி

இலங்கையின் பொருளாதாரம் கடந்த இருபது வருடங்களாக இறங்கு முகமாகவும் நலிவடைந்த ஒன்றாகவும் இருந்து வந்துள்ளது. அதற்கு இரண்டு காரணங்கள் அடிப்படையாக இருந்தன. ஒன்று தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த யுத்தம் அடுத்தது தாராள - தனியார் மயப்படுத்தப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள். இவ்விரண்டு நடைமுறைகளாலும் அந்நிய மூலதன ஊடுருவல்கள் பல்தேசியக் கம்பனிகளின் மூலம் நாட்டிற்குள் புகுந்து கொள்ள வழிவகுத்துக் கொடுத்தன. இவற்றை வழி நடாத்துவதில் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பன தலைமை தாங்கிச் சென்றன.

ஏகபோக முதலாளித்துவத்தின் எல்லையற்ற சுரண்டலுக்கு ஏற்றவாறான சந்தைப் பொருளாதார நடவடிக்கைகள் சீர்திருத்தம் முகாமைத்துவம் என்ற பெயர்களில் கொண்டு வரப்பட்டன. தனியார்மயம் வேகம் பெற்று ஆதிக்கம் அடைந்து கொண்டது. அந்நிய பல்தேசியக் கம்பனிகளே விலைகள், சம்பளம், தொழிலாளர் சேமநலன்கள், பொருட்களின் தரம் போன்ற சகலவற்றையும் தீர்மானிக்கும் ஏகபோக உரிமையாளர்களாகிக் கொண்டனர்.

உதாரணமாக தேயிலை ரப்பர் உற்பத்தியாகும் பெரும் தோட்டத்தொழில் துறையில் 22 கம்பனிகள் முகாமைத்துவம் என்னும் பெயரில் கையேற்றுக் கொண்டன. தேயிலையின் ரப்பரின் விலைகள் ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக் கொண்டே வந்த போதிலும் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு மறுக்கப்பட்டே வருகின்றது. அவர்களுக்குரிய உரிமைகள் சலுகைகள் இக் கம்பனிகளால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலை தனியார் மயப்படுத்தப்பட்ட சகல நிறுவனங்களிலும் காணப்படுகின்றன.

இது போன்ற பரந்த நடைமுறையானது உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை நிலையை சீர்குலைத்துக் கொண்டே செல்கிறது. வாழ்க்கைச் செலவைத் தாங்கிக் கொள்ள முடியாது அரை குறை வாழ்க்கைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இது முழுமையான பஞ்சம் பட்டினி நோக்கிய பயணமாகவே காணப்படுகின்றது.

இத்தகைய நலிவடைந்த பொருளாதாரத்தின் மீது மேலும் ஒரு பாரிய அடி கொடுப்பது போன்று அரசாங்கம் நாணயப் பெறுமதி மீது அதிரடி நடவடிக்கை மேற்கொண்டது. நாணத்தை சுதந்திரமாக மிதக்க விடுதல் என்னும் நடைமுறை மூலம் டொலரின் பெறுமதியை நூறு ரூபாவரை உயரச் செய்து கொண்டமையாகும். இதன் மூலம் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரித்துக் கொண்டன.

டொலரின் பெறுமதி அதிகரித்துக் கொண்டமையானது பல்தேசியக் கம்பனிகளுக்கும் ஏற்றமதியில் பெரும்லாபம் பெறுவோருக்கும் ஒருவரப்பிரசாதமாக அமைந்துள்ளது. ஆனால் இறக்குமதியாகும் ஒவ்வொரு பொருளுக்கும் மக்கள் அதிக விலை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டி வரும் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் இதனால் திருப்தியடைந்துள்ளன. இலங்கையில் சந்தைப் பொருளாதார சீர் திருத்தத்திற்குக் கிடைத்த வெற்றி எனவும் இதனால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் எனவும் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பொதுசன முன்னணி அரசாங்கம் இவ்வாறு மக்கள் மீது தொடுத்துள்ள பொருளாதாரப் போர் நாட்டை எங்கே கொண்டு சென்று விடப் போகின்றது என்பதே ஏக்கமாக உள்ளது. சுரண்டிச் சுகபோகம் அனுபவிக்கும் வெளிநாட்டு உள்நாட்டு முதலாளித்துவ சொத்து சுகம் படைத்தவர்களுக்கு டொலர் பெறுமதி உயர்வால் பிரச்சினை எதுவும் இருக்கப் போவதில்லை. கீழ் நடுத்தர வர்க்கமும் உழைக்கின்ற அனைத்து வர்க்க மக்களும் தான் பாரிய பொருளாதாரச் சுமையைத் தாங்க முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். யுத்தம் ஒருபுறத்தால் மக்களின் இரத்தத்தை உறுஞ்ச மறுபுறத்தில் பல் தேசியக் கம்பனிகளும் அந்நிய உள்நாட்டு முதலாளித்துவ சக்திகளும் பொருளாதார ரீதியில் மக்களைச் சூறையாட நாடும் மக்களும் நடைப் பிணங்களாகிக் கொள்ளும் அபாய நிலையே தோன்றியுள்ளது.

திறந்த தாராள தனியார் மயப் பொருளாதாரத்திற்கு வக்காலத்து வாங்கிய பொருளாதார நிபுணர்களும் அரசியல் வாதிகளும்இப்பொழுது என்ன பதில் சொல்லப் போகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி இன்றைய அழிவுகரமான பொருளாதார நிலைக்கு அடித்தளமிட்டு கட்டியெழுப்பியவற்றையே பொதுசன முன்னணி இன்று முழுமைப்படுத்திக் கொள்ளும் நிலைக்கு வந்துள்ளது. இப்போது விலைவாசிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் யு.என்.பி. மீண்டும் ஆட்சிக்கு வந்து எதைச் சாதிக்கபோகிறது இவ்விரு கட்சிகளுமே ஆளும் வர்க்க மேட்டிக்குடி சக்திகளின் பிரதி நிதிகள் தான். ஆண்ட பரம்பரையினரின் வாரிசுகள்தான். இவர்கள் ஒருபோதும் தமது சொந்த வர்க்கத்திற்கு எதிராகச் செல்ல மாட்டார்கள் என்பதையும் உழைக்கும் வர்க்கத்தினருக்குச் சார்பாக எதையும் செய்ய மாட்டார்கள் என்பதையும் மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்வதன் மூலமே மாற்று நடவடிக்கை நோக்கி முன்செல்ல முடியும்.

~~~

## பத்திரிகை

1ம் பக்கத் தொடர்

ஆணைக்குழு தனது விசாரணையின் போது கண்டித்திருக்கிறது. அத்துடன் பொலிசார் சமர்ப்பித்த வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தையும் நிராகரித்திருக்கிறது.

இவ்வாறான தகவல் அடிப்படையில் கைது செய்யப்பட்டு ஒப்புதல் வாக்குமூலங்களை நிர்ப்பந்தித்துப் பெற்றுக் கொண்டதன் பேரிலேயே பல ஆயிரம் பேர் விசாரனை இன்றி சிறைகளில் தடுப்பு முகாம்களில் இப்போதும் இருந்து வருகின்றனர்.

பத்திரிகையாளர்கள் மீதான அரசின் வன்முறை புதிய விடயமில்லை. பத்திரிகையாளர் ம. நிமல்ராஜனின் படுகொலைக்கு காரணமானவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப் படவே இல்லை. பத்திரிகையாளர் எஸ். திருச்செல்வத்தின் கைதும் தடுத்து வைத்தலையும் ஊடகவியலாளர் அமைப்புக்கள் கண்டித்து விடுதலை செய்யுமாறு கோரிய போதிலும் அவர் விடுதலை செய்யப்படவில்லை. அதனை புதியபூமி மிக வண்மையாகக் கண்டிக்கின்றது. அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றது.

## பிரித்தானிய

1ம் பக்கத் தொடர்

புலிகள் இயக்கத்தை தடை செய்யுமாறு வற்புறுத்துவதோ அல்லது பிரித்தானியா தடைசெய்ய முற்படுவதோ இன்று உருவாக்க முற்படும் பேச்சுவார்த்தைக்கான சூழலை சீர்குலைக்கும் ஒரு முயற்சியாகவே அமைந்துவிடும். இதை விடுத்து கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரக் கூடிய ஆக்க பூர்வ வழி முறைகளை முன்னெடுக்க முற்படல் வேண்டும். அல்லாது விடின் அழிவுகள் மட்டுமே தொடர முடியும்.

## இந்திய மேலாதிக்க

1ம் பக்கத் தொடர்

அவருடன் இருக்கும் சக்திகளும் நோர்வே முயற்சிகளை எதிர்க்கின்றனர். பெளத்த பீடாதிபதிகளும், எதிர்க்கின்றனர். சிஹல உறுமய பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய முன்னணி போன்றனவும் எதிர்க்கின்றன. நோர்வே முயற்சிகள் வெற்றியடையுமா தோல்வியடையுமா என்பதை விட அந்த முயற்சி மூலம் பெளத்த சிங்கள பேரினவாத கருத்தியலுக்கும் நடவடிக்கை களுக்கும் விழுகின்ற அடிகளையே நேர்மையான அரசியல் சக்திகள் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஆனால் தமிழ்க் கட்சிகள் என்பவை இந்தியாவின் நன் மதிப்பையும் நன் கொடைகளையும் பெற்றுத் தமது இருப்பை உறுதி செய்து கொள்ளவே முயலுகின்றன. அதனாலேயே யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை பற்றி உரத்துக் கூறிக் கொண்டு மூன்றாம் தரப்பைப் பற்றி மௌனமாகிக் கொள்கின்றனர். அவர்களது மூன்றாம் தரப்பு இந்தியாவாக இருக்க வேண்டும் என்பதாகவே உள்ளது. இந்தியா திம்புக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளுமா ? இவ்விடத்தில் மற்றொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். முன்பு இந்தியாவை கர்ணகடூரமாக எதிர்த்து வந்த சிங்கள பெளத்த பேரினவாத அமைப்புகள் இப்பொழுது இந்தியா பற்றி மௌனம் காத்து வருவதன் மர்மம்தான் புதிராக உள்ளது. இதில் ஜே. வி. பியின் நிலை புதிரின் மேல் புதிராக இருக்கிறது.

எனவே பேச்சுவார்த்தையின் மூலமான அரசியல் தீர்வில் நம்பிக்கை கொண்டுள்ளோரும் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளில் அக்கறை கொண்டுள்ளோரும் நோர்வேயின் முயற்சிகளை குழப்பும் வகையில் நடவடிக்கைகளை எடுக்கும் இந்திய ஆளும் வர்க்கத்தின் பக்கமோ அம்முயற்சிகளை எதிர்க்கும் சிங்கள, தீவிரவாதிகளின் பக்கமோ நிற்க முடியாது என்பதே உண்மை.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளராக ஏற்றுக் கொண்ட நோர்வேயின் முயற்சிகளுக்கு யுத்தத்தை எதிர்த்து பேச்சு வார்த்தையை விரும்பும் அனைத்து மக்களும் தமது ஆதரவை வழங்க வேண்டும்.

●●●

## மலையக

1ம் பக்கத் தொடர்

போன்றதொரு பொய் வாக்குறுதியா என்பது நடைமுறையில் நிருபிக்கப்படும்.

மலையகத்தமிழ் மக்களுடைய நாளாந்த வாழ்க்கை பற்றியும், இருப்பு பற்றியும் மலையக அசியல்வாதிகள் பொறுப்பற்ற விதத்தில் வாக்குறுதி அளிப்பது மிகவும் பாரதூரமானதாகும். 400 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்ற வாக்குறுதி தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் அச்சம்பள உயர்வு பற்றி வலுத்துவந்த கோரிக்கையை மழுங்கடித்தது.

அதேபோன்று இராணுவ முகாம்களை மூடிவிட வேண்டும் என்று வலுத்துவந்த கோரிக்கை யையும் மழுங்கடிக்கும் நோக்கில் அம்முகாம்கள் மூடப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டபின் அது மலையகத் தமிழ் மக்களின் இருப்புடன் விளையாடுவதாக இருக்கும். ஒரு நாட்டின் இராணுவம் அந்நாட்டின் அரசின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலேயே செயற்படும் இலங்கை நாட்டின் இராணுவம் பேரினவாத ரீதியாகவே கட்டிவளர்க்கப் பட்டிருக்கிறது. அதனால் அமைதியான இடத்தில் இராணுவ முகாம்களை அமைப்பதால் அமைதி குறையும் என்பதுடன் சிறுபான்மை தேசிய இணங்களுடைய பாதுகாப்பும் அச்சுறுத்தப்படும். இராணுவம் பேரினவாத பக்கச்சார்புடன் நடந்து கொள்ளும்போது இனங்களுக் கிடையேயான விரிசல்கள் அதிகமாகி மோதல்களுக்கே இட்டுச் செல்லும்.

நீதிக்கான போராட்டங்களினாலன்றி அடக்கு முறைகளாலும் ஒடுக்கு முறைகளாலுமே மலையகம் அமைதியை இழக்கும் என்பதை நினைவில் இறுத்திக் கொள்வது நன்று.

## சிந்திக்க வேண்டிய செய்திகள்

### கடமை

பெளத்த பிக்குமாருக்கு இரண்டு கடமைகள் உண்டு. ஒன்று ராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொடுப்பது. இரண்டாவது ராணுவத்தை விட்டுத் தப்பிச் சென்றவர்களை மீண்டும் ராணுவத்தில் சேர வைப்பது என வென்கமுவே தேரர் கூறி இருக்கிறார்.

### வெற்றியின் இரகசியம்

நாங்கள் எங்களால் தான் வெற்றி பெற்றோமே தவிர உங்களால் அல்ல என்பதை நினைவில் வைத்திருக்குமாறு அந்தத் தமிழ்க் கட்சியின் தலைவர் தன்னைச் சந்திக்க வந்தவர்களிடம் மிகுந்த அதிகாரத்தொனியுடன் கூறிக் கொண்டாராம் அலுவலுக்காக வந்தவர்கள் உண்மை உண்மை என மனத்திற்குள் சொல்லிக் கொண்டனராம்.

### இசையும் கதையும்

கிழக்கில் நாளாந்தம் ராணுவம் தமது கைங்கரியங்களை நடாத்திக் கொண்டுதான் இருக்கிறது. இவற்றின் மத்தியில் மட்டக்களப்பு மக்களை மகிழ்விக்க இசை நிகழ்ச்சி ஒன்றினை அண்மையில் தடல் புடலாக ஒழுங்கு செய்தனர். ஆனால் மக்கள் அதைப் பொருட்படுத்தவே இல்லை. அன்று ஹர்த்தால் நடைபெறாது விட்டிருந்தால் இசை நிகழ்ச்சிக்கு பல்லாயிரம் மக்கள் திரண்டிருப்பர் என்று படையினர் தமக்குத் தாமே சமாதானம் கூறிக் கொண்டனர்.

### காட்சி மாற்றம்

மலையக மக்கள் முன்னணிக்குள் ஒரே இரைச்சலும் புகைச்சலுமாக இருக்கிறதாம். பதவி கிடைத்தால் பத்தும். மறந்து போகும். அல்லவா ? தேசியப் பட்டியல் எம்.பிக்கு ஒரே அடிபிடி. அரவிந்த குமார் ஒரே தாவலில் ஆறுமுகம் தம்பியின் காலடிக்கு தாவி விட்டார். இப்போது போன மச்சான் காதர் திரும்பவும் ம.ம. முன்னணியின் அண்ணன் காலடிக்குத் தாவ உன்னிக்கொண்டிருக்கிறாராம். எல்லாம் காரியத்தோடுதான்.

### புதிய கலாச்சாரம்

விடியும் ஒவ்வொரு நாளிலும் யுத்தம் செய்வோம். அதுவும் மிக உக்கிரமாக யுத்தம் புரிவோம். எந்த ஒரு காரணத்திற்காகவும் யுத்த செலவீனம் குறைக்கப்படமாட்டாது. யுத்த நிறுத்தத்திற்கு இணங்க மாட்டோம். யுத்தம் செய்து கொண்டே சமாதானம் பேசுவோம். இதுவே புதிய அரசியல் கலாசாரமாகும். எனவே யுத்தத்திற்கு ஒரு குழந்தையையும் பெளத்த சாசனத்திற்கு மற்றொரு குழந்தையையும் பெளத்தர்கள் பெற்றுக் கொடுக்கவேண்டும். இத்தகைய யுத்தப் பொன்மொழிகளை அள்ளி வழங்கி வருபவர் வேறு யாரும் அல்லர். இலங்கை நாட்டின் பிரதமரேயாவார்

வெளியிடுபவர் : இ. தம்மையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யு. கே. பிரின்டர்ஸ் ... சிவானந்தா வீதி, கொழும்பு 13.
~~~